ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீவைஷ்ணவ ரத்நமாலா

மாறன் மறையின் பொருளான ஏதமில் பன்னீராயிரம் ஸாதித்த

## வாதி₃கேஸரி அழகியமணவாளச்சீயர்

அருளிச்செய்த

# தீ₃பப்ரகாஶஸஹித தத்த்வதீ₃பம், தத்த்வநிரூபணம்

பதிப்பாசிரியர்

**கோயில் ஆத்தான் விஜயராகவாசார்யஸ்வாமி**

பரிஶோத₄கர்கள்

**ஸ்ரீ உ.வே. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார்**

ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்ஶநம் ஆசிரியர்

**திருநாராயணபுரம் அரையர் ஸ்ரீ உ.வே. ஸ்ரீராமஶர்மாஸ்வாமி**

**ஸ்ரீ உ.வே. காரப்பங்காடு வேங்கடாசார்யஸ்வாமி ஶதாப்தி வெளியீடு**

பார்த்திவ பங்குனி
புநர்வஸு

விலை ரூ. 150

# 24 தத்வங்களின் படைப்பு (வ்யஷ்டி ஸ்ருஷ்டி)




ஸ்ரீ உ வே டி ரங்காசார்யஸ்வாமி

# பஞ்சீகரண ப்ரக்ரியை




ஸ்ரீ உ வே டி ரங்காசார்யஸ்வாமி

ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீவைஷ்ணவ ரத்நமாலா

மாறன் மறையின் பொருளான ஏதமில் பன்னீராயிரம் ஸாதித்த

## வாதி$_3$கேஸரி அழகியமணவாளச்சீயர்

அருளிச்செய்த

# தீ$_3$பப்ரகாஶஸஹித தத்த்வதீ$_3$பம், தத்த்வநிரூபணம்

பதிப்பாசிரியர்

**கோயில் ஆத்தான் விஜயராகவாசார்யஸ்வாமி**

பரிஶோத$_1$கர்கள்

**ஶ்ரீ உ.வே. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார்**

"ஶ்ரீவைஷ்ணவ ஸுதர்ஶநம்" ஆசிரியர்

திருநாராயணபுரம் அரையர் ஶ்ரீ உ.வே.ஶ்ரீராமஶர்மாஸ்வாமி


ஶ்ரீ உ.வே. காரப்பங்காடு வேங்கடாசார்யஸ்வாமி ஶதாப்தி வெளியீடு

பார்த்திவ பங்குனி புநர்வஸு

விலை ரூ.150

6 - 4 - 2006

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

முகவுரை

{ ஸ்ரீக்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார், M.A.,B.L. (ஸுதர்ஶநர்),
ஆசிரியர் - ஸ்ரீவைஷ்ணவஸுதர்ஶநம்,
புத்தூர் அக்ரஹாரம், புத்தூர், திருச்சி - 17.}

பெரியவாச்சான்பிள்ளைக்கும், நாயனாராச்சான்பிள்ளைக்கும் ஈடாகும் திருவாய்மொழிக்குப் பன்னீராயிரப்படி உரை அருளிச்செய்தவருமான வாதிகேஸரி அழகியமணவாளச்சீயர், ரஹஸ்யத்ரயங்களுக்கும் வடமொழியில் தத்வதீபம் என்னும் விவரணத்தையும் அதற்குத்தாமே தீபப்ரகாஶம் என்னும் மணிப்ரவாளநடையில் அமைந்துள்ள விவரணத்தையும் அருளிச்செய்துள்ளார். அந்த தீபப்ரகாஶஸ்ரீஸூக்திகளை மணவாளமாமுனிகள் தம்முடைய தத்வத்ரய (சித்35-சூர்ணை) வ்யாக்யாநத்தில் மேற்கோளாகக் காட்டியுள்ளார். இந்நூல் இதுவரையில் தெலுங்குலிபியிலேயே அச்சிடப்பட்டிருந்தது. அதை ஸ்ரீ.உ.வே. ஆத்தான் விஜயராகவாசார்யஸ்வாமி தத்வதீபத்தை நாகரலிபியிலும், தீபப்ரகாஶத்தைத் தமிழ்லிபியிலும், மேலும்கீழுமாக அமைத்து இந்நூலில் அழகாக அச்சிட்டு வழங்கியிருக்கிறார்.

அழகியமணவாளச்சீயரைப்பற்றி உபதேசரத்தினமாலையில் (45) மாமுனிகள் குறிப்பிடுகையில் "தம்பெரிய போதமுடன்" என்று இவரைச் சிறப்பித்திருக்கிறார். இந்தச்சிறப்புக்கு ஏற்ப அவரது பன்னீராயிரப்படியில் மற்ற உரைகளில் காணப்படாத புதுமுறைகளில் நிர்வாஹங்களை அருளியுள்ளதைக் காணலாம். அதுபோலவே இந்த நூலிலும் ஸம்ப்ரதாய-அர்த்தங்களை மாற்றாமலே பலவிடங்களில் புது நிர்வாஹங்களை ஜீயர் அருளியுள்ளார். உதாரணத்திற்கு இரண்டு இடங்களைக்காட்டுவோம்.

(1) மாமுனிகளால் முன் குறித்தபடி மேற்கோள் காட்டப்பட்ட இடத்தில் இவர் பராயத்தாதிகரணத்திற்கும் அதன் விவரணமான "ஆதாவீஶ்வர" என்று தொடங்கும் நடாதூரம்மாளுடைய தத்வஸார-ஶ்லோகத்திற்கும், அம்மாள் ஶிஷ்யரான ஶ்ருதப்ரகாசிகாபட்டர், நிர்வாஹத்தைக்காட்டிலும் சிறிது வேறுபட்ட நிர்வாஹத்தைக் காட்டியுள்ளார். அதாவது - "ஜீவனுக்கு புண்யம் பாபம் ஆகிய அனைத்துக் கர்மங்கள்விஷயத்திலும் ஈஶ்வரன் ஜீவனுக்கு ப்ரதமப்ரவ்ருத்தியில் (முதல் முயற்சியில்) ஸ்வாதந்த்ர்யம் அளித்து, தான் உபேக்ஷித்துநிற்கிறான். த்விதீயப்ரவ்ருத்தி தொடங்கிப் பின்வரும் முயற்சிகளில் ஜீவன் தொடங்கியபடியே தூண்டிவிடுவதாகிற அநுமதியைச் செய்கிறான் என்பது பட்டர் நிர்வாஹம். வாதிகேஸரி ஜீயர் நிர்வாஹம் பின்வருமாறு - "புண்யகர்மங்கள் விஷயத்தில் முதல் முயற்சியில் உபேக்ஷித்து நிற்கிறான்; பின் முயற்சிகளில் ஜீவன் தொடங்கியபடி அநுமதிக்கிறான் என்பது சரியே. ஆனால் பாபகர்மவிஷயத்தில் எல்லா முயற்சிகளிலும் உபேக்ஷித்துநிற்கிறான் என்றே கொள்ளவேண்டும்" என்று. இந்த நிர்வாஹத்தில் எம்பெருமான் ஜீவனைப்பின் முயற்சிகளில் பாபங்களைச்செய்யும்படி தூண்டிவிடுகிறான் என்று கொள்வதாலே அவனுடைய கருணைக்கு ஏற்படும் குறை தவிர்க்கப்படும். அதனாலே மாமுனிகள் தம் தத்வத்ரயவ்யாக்யாநத்தில் இந்த நிர்வாஹத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறார்.

(2) "ஸர்வதர்மாந் பரித்யஜ்ய" (கீதை 18-66) என்று தொடங்கும் ஶ்லோகமே பகவத்கீதையில் சரமஶ்லோகம் என்பது மற்ற அனைத்து ஆசார்யர்களுடைய நிர்வாஹம். இந்நூலில் வாதிகேஸரி ஜீயர் - "மந்மநா பவ" (18-65) என்னும் ஶ்லோகமும், "ஸர்வதர்மாந் பரித்யஜ்ய" என்னும்

ச்லோகமும் சேர்ந்தே சரமச்லோகமாகும் என்று நிர்வஹித்திருக்கிருர்.

ரஹஸ்யத்ரயத்திற்கு மிக விரிவான வ்யாக்யாநமான இந்த நூலை அழகிய முறையில் அச்சிட்டு ஆத்தான் ஸ்வாமி வழங்கியிருப்பது ஸ்ரீவைஷ்ணவவுலகிற்குப் பேருபகாரமாகும். அனைவரும் இதைப் பெற்றுப் படித்துப் பயன்பெறுவார்களாக.

தாஸன்
ஸ்ரீ க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார்
(ஸுதர்சனர்)

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீமத்$_3$வரவரமுநயே நம:

## ஒரு விண்ணப்பம்

"கற்றோர்கள் தாமுகப்பர்; கல்விதன்னில் ஆசையுள்ளோர்
பெற்றோம் என உகந்து பின்பு கற்பர்"

விஶிஷ்டாத்வைதஸித்$_3$தா$_4$ந்தத்தை அடிப்படையாகக் கொண்டு, ப்ராசீநமான ஆசார்யர்களின் உபதே$_3$ஶபரம்பரையில் வந்த அர்த்த$_2$ங்களை உள்ளடக்கியது ஸ்ரீவைஷ்ணவஸம்ப்ரதா$_3$யம். இதனை 'எம்பெருமானார் தரிசநம்' என்று நம்பெருமாள் பேரிட்டு நாட்டி வைத்தார்.

இந்த ஸம்ப்ரதா$_3$யத்தின் அடிப்படைக்கோட்பாடுகள் ரஹஸ்யத்ரயம் என்னும் மூன்று ரஹஸ்யங்களில் அடங்கியுள்ளன. திருமந்திரம், த்$_3$வயம், சரமஶ்லோகம் என்பவையே இந்த மூன்று ரஹஸ்யங்கள். இதில் எட்டெழுத்துக்களைக் கொண்ட திருமந்திரம் 'மந்திரராஜன்' எனப்படுகிறது. ஆறுபத$_3$ங்களைக் கொண்டு இரண்டு வாக்யங்களில் அமைந்த த்$_3$வயமந்திரம் 'மந்த்ரரத்நம்' எனப்படுகிறது. இவ்விரண்டு மந்திரங்களும் வேதத்தில் காணப்படுகின்றன. ஐந்தாவது வேதம் என்று புகழ்பெற்ற மஹாபா$_4$ரதத்தின் ஸாரமான ப$_4$க$_3$வத்$_3$கீ$_3$தையில் சரமஶ்லோகம் எனப்படும் மூன்றாவது ரஹஸ்யம் பொலிந்து விளங்குகிறது.

அதில், ப$_3$த$_3$ரிகாஶ்ரமம் என்னும் தி$_3$வ்யதே$_3$ஶத்தில் எம்பெருமான், தானே ஆசார்யனாகவும், ஶிஷ்யனாகவும் நின்று திருமந்திர-உபதே$_3$ஶத்தைச்செய்தருளினான். அவ்வாறே பெரியபிராட்டியாருக்கு த்$_3$வயமந்திரத்தை எம்பெருமானே உபதே$_3$ஶித்தருளினான். ஸ்ரீக்ருஷ்ணனாக அவதரித்து யுத்$_3$த$_4$ பூ$_4$மியில் அர்ஜுநனுக்கு சரமஶ்லோகத்தை உபதே$_3$ஶித்தான். ஸ்ரீவைஷ்ணவகு$_3$ருபரம்பரையில் முதலாவது கு$_3$ருவாக விளங்கும் ஸ்ரீமந்நாராயணனால் வெளியிடப்பெற்ற இந்த மூன்று ரஹஸ்யங்களும் அறியவேண்டும் அர்த்த$_2$ங்கள் எல்லாவற்றையும் தம்முள் அடக்கிக் கொண்டு உலகம் உய்வதற்குக் காரணமாய் விளங்குகின்றன.

"ஜ்ஞாநாந்மோக்ஷ:" (மெய்யறிவினாலேயே முக்தி) என்று ஶாஸ்த்ரங்கள் கூறுகின்றன. இந்த அறிவு எதுவென்றால் மேற்கூறிய ரஹஸ்யத்ரயத்தினால் பெறப்படும் அறிவேயாகும். இவ்வாறு முக்திக்-குக்காரணமாய் உள்ளதால் இம்மந்திரங்களையும், அவற்றின் பொருளையும் மிகவும் ரஹஸ்யமாகவே மறைத்து, அஷட்கர்ணமாக (அறுசெவிப்படாதபடி) கு$_3$ருஶிஷ்யபரம்பரையில் பாதுகாத்து வந்தனர். உலகம் உய்யவேண்டும் என்னும் பரந்த உள்ளம்படைத்த இராமாநுசர் ஆசையுடையவரெல்லாரும் இதை அறிந்து அநுஷ்டி$_2$க்கும் வகையில் முன்பிருந்த வரம்பை நீக்கியருளினார்.

எனவே ஓராண்வழியாக வந்த இந்த ரஹஸ்யத்ரயத்தின் சீரிய பொருள்களையெல்லாம் நம்போல்வார் இழந்து விடாதபடி, உடையவருக்குப் பிற்பட்ட ஆசார்யர்கள் அவற்றை நூல் வடிவில் தந்தருளினர். இவ்வாறு தோன்றியவையே பெரியவாச்சான்பிள்ளையின் பரந்தரஹஸ்யம், பிள்ளை லோகாசார்யரின் அஷ்டாத$_3$ஶரஹஸ்யம், அழகியமணவாளப்பெருமாள் நாயனாரின் அருளிச்செயல் ரஹஸ்யம் முதலானவை.

நமது பூர்வாசார்யர்கள் மயர்வறமதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார்களின் தி$_3$வ்யஸூக்திகள் அனைத்தையும் இந்த ரஹஸ்யத்ரயத்தின் விவரணமாகவே நிரூபித்துக்காட்டியுள்ளனர். திருமந்திரத்தின் முதல் இரண்டு பத$_3$ங்கள் முதலாயிரத்தையும், மூன்றாவது பத$_3$ம் இரண்டாவது ஆயிரமான பெரியதிருமொழியையும், த்$_3$வயம் திருவாய்மொழியையும், சரமஶ்லோகம் இயற்பாவையும் சுருங்கக் கூறுகின்றன. வ்யாக்$_2$யாநம் செய்தருளிய ஆசார்யர்களின் திருவுள்ளத்தில் எப்போதும் ரஹஸ்யத்ரயார்த்த$_2$ங்களே ஓடிக்கொண்டிருக்கும். உதாரணமாக, "அக்$_3$ரத: ப்ரயயௌ ராம: ஸீதா மத்$_4$யே ஸுமத்$_4$யமா । ப்ருஷ்ட$_2$தஸ்து த$_4$நுஷ்பாணி: லக்ஷ்மணோऽநுஜகா$_3$ம ஹ" (சக்ரவர்த்திதிருமகன் முன்னே செல்ல, பிராட்டி அவனைத்தொடர, கையும் வில்லுமாக அவர்களை இளையபெருமாள் பின் தொடர்ந்தார்) என்னும் ஶ்லோகார்த்த$_2$த்தை விளக்கவந்த பெரியவாச்சான்பிள்ளை, ப்ரணவத்தில் மூன்று அக்ஷரங்களாலும் சொல்லப்படும் மூன்று தத்வங்கள் இங்கே வரிசையாகக் கூறப்படுவதால், 'ப்ரணவம் ஒரு வடிவெடுத்து நடந்தாற்போல் இருந்ததே!' என்று அநுப$_4$விக்கிறார்.

மாமுனிகள் எப்போதும் த்வயமந்த்ரத்தை உச்சரிப்பதனால் அவரது உதடு துடித்துக்கொண்டே இருக்குமாம்; அம்மந்த்ரத்தின் அர்த்தத்தை அநுஸந்தித்துக்கொண்டே இருப்பதனால் எப்போதும் அவரது திருமேனி மயிர்க்கூச்செறியுமாம். பூர்வாசார்யர்கள் தமக்குத் திருவுள்ளம் மிகவும் உகந்த போதெல்லாம் ஒருமுறை த்$_3$வயார்த்த$_2$த்தை ஶிஷ்யர்க்கு உபதேஶித்ததாக சரித்ரம். ஶிஶுப்ராயத்திலே பட்டரை எழுந்தருளப் பண்ணிக்கொண்டு வருங்கால் அவரது ரக்ஷைக்காக த்$_3$வயத்தை எம்பார் என்னும் ஆசார்யர் அநுஸந்தி$_4$த்து வந்ததாகவும், குழந்தையைக்கண்ட உடனே "த்$_3$வயம் பரிமளிக்கிறதே" என்று உடையவர் வியந்ததாகவும் குருபரம்பரை கூறும்.

பெரியவாச்சான்பிள்ளைக்கும், அவருடைய திருக்குமாரரான நாயனாராச்சான்பிள்ளைக்கும் ஶிஷ்யராகத் திகழ்ந்தவர் அழகியமணவாளச் சீயர். ஆசார்யகைங்கர்யத்திலேயே ஈடுபட்டிருந்த இவர், தம்முடைய மத்$_4$யமவயஸ்ஸில்தான் ஶாஸ்த்ரஸம்ப்ரதா$_3$யார்த்த$_2$ங்களை ஆசார்யரான பெரிய வாச்சான்பிள்ளையிடம் க்ரமமாகக் கற்றுத்தேர்ந்தார். வாத$_3$த்தில் தன்னிகரற்றவராக விளங்கிய இவர் பரசமயிகளை வென்று 'வாதி$_3$கேஸரீ' என்னும் பட்டத்தையும் பெற்றார். ஆசார்யருடைய க்ருபாகடாக்ஷம் ஒரு ஶிஷ்யனை எந்த அளவுக்கு உயர்த்தமுடியும் என்பதற்கு இவரது சரிதமே ஒரு எடுத்துக்காட்டு.

திருவாய்மொழியை ரக்ஷிப்பதற்காக ஐந்து மதிட்சுவர் போன்ற வ்யாக்$_2$யாநங்களை அருளிய 'திருவாய்மொழியைக்காத்த குணவாளர்' ஐவரில் இவரும் ஒருவராவார். இவருடைய உரையில் இவரது ஆழ்ந்த அறிவு புலப்படும். இத்தன்மைபற்றியே 'தம் பெரிய போதமுடன்' என்று மாமுநிகள் தமது உபதேசரத்தினமாலையில் இவரைப் போற்றுகிறார். இவ்வாறு சிறந்த அறிவு நிரம்பப் பெற்றிருந்த போதிலும் முன்னோர் மொழிந்த முறை தப்பாமல் ஸத்ஸம்ப்ரதா$_3$ய-அர்த்த$_2$விஶேஷங்களைத் தாம் கேட்டபடியே தமது உரையில் பதித்து வைத்துள்ளபடியாலேயே இந்த உரையை 'ஏதமில் பன்னீராயிரம்' என்று மாமுநிகள் கொண்டாடுகிறார்.

இத்தகைய பெருமைகளைக் கொண்ட இந்த ஆசார்யர் ரஹஸ்யத்ரயத்துக்கு விவரணமாக எளிய ஸம்ஸ்க்ருதநடையில் "தத்வதீ$_3$பம்" என்றொரு அற்புதமான க்$_3$ரந்த$_2$த்தை அருளியுள்ளார். நமது ரஹஸ்யக்$_3$ரந்த$_2$ங்கள் பெரும்பாலும் மணிப்ரவாளநடையிலேயே அமைந்துள்ளன. ஆனால் இந்நூல் ஸம்ஸ்க்ருதத்தில் இயற்றப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. ரஹஸ்யத்ரயம் பற்றிய ப்ரமாணங்கள் (சான்றுகள்) அனைத்திற்கும் பொக்கிஷமாகத் திகழ்வது இந்நூல். இதனை இன்னும் எளிமைப்படுத்தித் தருவதற்காகத் தாமே "தீ$_3$பப்ரகாஶம்" என்னும் மணிப்ரவாளநடையில் அமைந்த அழகிய உரையை

அருளியுள்ளார்.

பெரியபிராட்டியாரைப் போற்றத்துவங்கிய ஶ்ரீபராஶரபட்டர் தமது ஶ்ரீகு$_3$ணரத்நகோஶத்தில் "ப்ரக்ருதி-மது$_4$ரம் க$_3$ாத்ரம் ஜாக$_3$ர்த்தி முக்$_3$த$_4$விபூ$_4$ஷணை: வலயஶகலைர்து$_3$க்$_3$த$_4$ம் புஷ்பைஶ்ச கல்பலதா யதா$_2$" என்கிறார். அதாவது - "பெரியபிராட்டியாரின் திருமேனி இயற்கையிலேயே அழகுமிக்கது; கற்கண்டுடன் சேர்ந்த பால் போன்றும், புஷ்பங்களோடு மிளிரும் கற்பகத்தரு போன்றும் பெரிய பிராட்டியாரின் திருமேனி சிறந்த திருவாப$_4$ரணங்களால் அலங்கரிக்கப்பெற்று மேலும் பொலிவுடன் விளங்குகிறது". அவ்வாறே 'செந்திறத்த தமிழ்' என்று இயல்பாகவே வனப்பு மிக்க தமிழ் மொழியானது, 'வடசொல்' என்னும் திருவாப$_4$ரணத்தால் நன்கு அலங்கரிக்கப்பெற்று மணிப்ரவாள நடையாய்ப் புதுப்பொலிவுடன் மிளிர்வதை இந்நூலில் நாம் அநுபவிக்கலாம்.

வேத$_3$ம், ஸ்ம்ருதி, இதிஹாஸம், புராணம், அருளிச்செயல், ஆசார்யர்களின் ஸ்தோத்ரங்கள் போன்றவற்றிலிருந்து பல்லாயிரக்கணக்கான ப்ரமாணமேற்கோள்களை எடுத்தாள்வதுடன், யோஜநாபே$_4$த$_3$ங்களையும் (மாற்றுப் பொருள்விளக்கங்களையும்) காட்டுவதில் ஒப்பற்றவர் இந்த ஆசிரியர். பிராட்டியின் அணுத்வம், காரணத்வம், புருஷகாரத்வம், உபாயத்வம் முதலிய விஷயங்களில் தக்க சான்றுகளுடன் ஸத்ஸம்ப்ரதா$_3$யார்த்த$_2$ங்களை ஐயம் திரிபறக் கல்வெட்டாக்கியுள்ளார். அக்காலத்தில் நிலவிய பல்வேறு கருத்துக்களையும் எடுத்துக் காட்டி அவற்றுள் ப்ரமாண-உபபத்திகளுக்குப் பொருந்தியவற்றை அங்கீ$_3$கரித்தும், பொருந்தாவற்றை க$_2$ண்டி$_3$த்தும் ஸித்$_3$த$_4$ாந்தஸ்தா$_2$பநம் செய்தருளியுள்ளார். உதா$_3$ரணமாக, த்$_3$வயத்தில் "ஶ்ரீமந்" என்கிற பத$_3$த்தை விளிவேற்றுமையாக நிர்வஹித்து, க$_3$த்$_3$யத்தில் அதற்கு அநுகு$_3$ணமாக ப்ரயோக$_3$த்தையும் காட்டியிருக்கிறார். நமது ரஹஸ்யக்$_3$ரந்த$_2$ங்கள் ஸூத்ரவடிவில் ஸித்$_3$த$_4$ாந்தக்கருத்துக்களையே காட்டிநிற்கின்றன; ஆனால் இந்நூலில் பூர்வபக்ஷ-விசார-ஸித்$_3$த$_4$ாந்தரூபமான ஶாஸ்த்ரப்ரக்ரியை கையாளப்பட்டுள்ளது விஶேஷம்.

ஆளவந்தார் தமது ஆசிரியரை வாதுக்கு அழைக்கவந்தவர்களிடம் கூறியதாக ஒரு ஶ்லோகம் ப்ரஸித்$_3$தி$_4$ பெற்றுள்ளது.

ந வயம் கவயஸ்து கேவலம் ந வயம் கேவலதந்த்ரபாரக$_3$ா: ।
அபி து ப்ரதிவாதி$_3$வாரணப்ரகடாடோபவிபாடநக்ஷமா: ॥

அதாவது - யாம் கவிகள் என்பது மட்டுமல்ல; தர்க்கம் முதலான ஶாஸ்த்ரங்களில் கரைகண்டவர்கள் என்பது மட்டுமல்ல; வாதில் எதிரிடும் யானைபோன்றவர்களின் க$_3$ர்வத்தை அடக்கும் திறமை கொண்டவர்களும்கூட. இங்கே "வயம்" (யாம்) என்றசொல் கெ$_3$ளரவப் பொருளில் ஆளவந்தார் ஒருவரையே குறிப்பதாகக் கொள்ளலாம்; அதைவிட, யாம் என்ற சொல் தம்மோடு சேர்ந்த அனைத்து ஶ்ரீவைஷ்ணவாசார்யர்களையும் உள்ளடக்கும் என்பது பொருத்தமானது. ஏனென்றால், ஆளவந்தாருக்குப் பிற்பட்ட ஆசார்யர்கள் அனைவரிடமும் இந்த ஶ்லோகத்தில் கூறப்பட்ட தகுதிகள் காணப்படுகின்றன. "க$_3$த்$_3$ய: கவீநாம் நிகஷம் வத$_3$ந்தி" (உரைநடை கவிகளின் உரைகல்) என்னும் ப்ரஸித்$_3$தி$_4$யைப்பற்ற கவிகளின் திறனை அளவிட்டுக்காட்டும் உரைநடையில் மூன்று க$_3$த்$_3$யங்களை அருளிய எம்பெருமானார் ஒரு கவிஸார்வபெ$_4$ளமரே. இந்த ரீதியில் வாதிகேஸரிஜீயர் தமிழ் ஸம்ஸ்க்ருதம் ஆகிய இருமொழிகளிலும் சிறந்த கவியாகத் திகழ்கிறார். ஸம்ஸ்க்ருதத்தில் இவர் அருளிய நரஸிம்ஹாஷ்டகம் என்னும் சிறிய ஸ்தோத்ரம் மிக அழகானது. நாம் அநுதி$_3$நமும் அநுஸந்த$_4$ாநத்தில் கொள்ளத்தக்க இது இந்நூலின் முதலில் இணைக்கப்பட்டுள்ளது. இவரது கீ$_3$தை வெண்பா மிகவும் புகழ் பெற்றது. திருவாய்மொழியில் ஒவ்வொரு த$_3$ஶகத்துக்கும் ஸங்க்$_3$ரஹமாக த்$_3$ரமிடோ$_3$பநிஷத்ஸங்க$_3$தி என்னும் ஸம்ஸ்க்ருதஶ்லோகவடிவிலான நூல் மிக அழகானது.

இந்த க்₃ரந்த₂த்தின் ஸாராம்ஸத்தை இனிக்காண்போம். இதில் முதல் ப்ரகரணமான திருமந்த்ர-ப்ரகரணத்தில் ஜீவாத்மஸ்வரூபம் ப்ரகாஸிப்பிக்கப்படுகிறது; இரண்டாவதான த்₃வயப்ரகரணத்தில் ஹிதரூபமான அநுஷ்ட₂ாநம் காட்டப்படுகிறது; மூன்றுவதான சரமஸ்லோகப்ரகரணத்தில் இந்த அநுஷ்ட₂ாநம் ஸரண்யனுன எம்பெருமானுக்கு மிகவும் இஷ்டம் என்று கூறப்படுகிறது.

திருமந்த்ரப்ரகரணத்தில் ப்ரதிபாதி₃க்கப்படும் அர்த்த₂ங்களாவன:- அஷ்டாக்ஷரம் மற்ற எல்லா மந்த்ரங்களைக்காட்டிலும் உயர்ந்தது. அஷ்டாக்ஷரத்திலுள்ள எழுத்துக்கள், சொற்கள் பற்றியும், மந்த்ரங்களில் வைதி₃கம், தாந்த்ரிகம், வைதி₃கதாந்த்ரிகம் என்கிற பிரிவு பற்றியும், திருமந்த்ரத்தால் சேதநனுடைய ப₄க₃வதே₃கஸேஷத்வமாகிற ஸ்வரூபமே ப்ரத₄ாநமாகச் சொல்லப்படுகிறது என்பதுபற்றியும் விளக்கப்பட்டுள்ளது. முதலில் அகாரத்தின் பொருளான காரணத்வமும், அகார-வாச்யன் நாராயணனே என்பதும், அவன் ஸ்ரிய:பதியே என்பதும் நிரூபிக்கப்படுகிறது. லக்ஷ்மிக்கு காரணத்வம் பொருந்தாது என்றும் ஸ்பஷ்டமாக இவ்வாசிரியர் ஸ்த₂ாபிக்கிறுர். அகாரவாச்யன் உபாயமும் உபேயமுமாக இருக்கிறுன். உகாரம் அநந்யார்ஹத்வத்தையும், மகாரம் அசித்தையும் குறிக்கும். ஜீவனுக்கும் ப₄க₃வானுக்கும் உள்ள ஸம்ப₃ந்த₄ம் ஸ்வஸ்வாமிப₄ாவம்; எனவே ஒருவன் தன்னை எம்பெருமானுக்கு த₃ாஸனுக நினையாமல் வேறுவிதமாக நினைத்தானுகில் அவன் ஆத்மாவைத் திருடியவனுகிறுன்; இந்த பாபத்துக்குக்கு ப்ராயஸ்சித்தம் "யமோ வைவஸ்வதோ ராஜா" என்கிற ஸ்லோகத்தில் சொன்னபடி அவனுடைய ஸேஷித்வத்துக்கு இசைகையே. 'நான் எம்பெருமானுக்கு த₃ாஸன்' என்கிற இந்த ஜ்ஞாநமே யாக₃ாதி₃களான எல்லா புண்யகர்மமும், ஜ்ஞாநயோக₃மும், உபாஸநரூபமான த்₄யாநயோக₃மும், ந்யாஸம் எனப்படும் ப்ரபத₃நமும், இந்த ஸாத₄நாநுஷ்ட₂ாநங்-களின் (ஸ்வரூப-ஆவிர்ப₄ாவமாக வேத₃ம் கூறுகிற) ப₂லமும் ஆகும். ப்ரணவம் வில்லாகவும், ப்₃ரஹ்மம் இலக்காகவும் கொண்டு ஜ்ஞாநியான புருஷனுலே ஆத்மாவான அம்பு எய்யப்படுகிறது; அது அந்த இலக்கிலே தைத்து ப்₃ரஹ்மத்தை அடைந்துவிடும் என்று ஒரு ப்ரமாணவசநம் சொல்லுவதும் ப்ரணவப்ரதிபாத்₃யமேயாகும். உகாரம் லக்ஷ்மியைக்குறிப்பதாகவும் ஒரு நிர்வாஹம்.

அத்யந்தபாரதந்த்ர்யத்தைக்காட்டும் நமஸ்ஸப்₃த₃மானது அஹங்காரமமகாரங்களைப்போக்குகிறது. இந்த நமஸ்ஸு நமது ப்ரபத₃நத்தை வெளிக்காட்டுவதாக உள்ளது; நிக்ஷேபம் முதலிய ஆறு அங்கங்களோடு கூடினதாய், "ந்யாஸ இதி ப்₃ரஹ்மா" என்ற ஸ்ருதிவாக்யப்படி ப்₃ரஹ்மத்தையே குறிக்கும். அடுத்ததான நாராயணபத₃ம் ஜீவபரர்களுடைய ஸரீராத்மப₄ாவஸம்ப₃ந்த₄த்தைக் காட்டுகிறது. "நாரஸ்த்விதி ஸர்வபும்ஸாம்" என்கிற ப்ரமாணத்தின்படி நாராயணனே உபாயமும் உபேயமும் என்று அறியலாம். "மாதா பிதா ப்₄ராதா" என்றபடி நாராயணன் ஸர்வவித₄ப₃ந்து₄வாகிறுன். ஜக₃த்து அவனுக்கு ஸரீரம்; ஸர்வஸப்₃த₃ங்களும் அவனையே குறிக்கும். நாராயணன் உப₄யலிங்க₃த்தோடு கூடியவன். அவனே உலகுக்கெல்லாம் காரணம். அவன் எல்லாவிதமான காரணமாகவும் இருக்கிறுன். நாராயணஸப்₃த₃த்தின் இரண்டுவிதமான வித்₃ரஹத்தாலும் இருவிதமான வ்யாப்தி சொல்லப்படு-கிறது. பு₃ஹுவ்ரீஹி(அன்மொழித்தொகை)யாலே அந்தர்வ்யாப்தியும், தத்புருஷஸமாஸத்தாலே (ஆறும் வேற்றுமைத்தொகையாலே) ப₃ஹிர்வ்யாப்தியும் அறியப்படுகிறது. பகவானை ஒருகாலும் விட்டுப்பிரியாத பிராட்டியின் ஸ்வரூபம் அணுவே.

திருமந்த்ரத்தில் ப்ரணவத்தையொழிந்த பகுதியை மந்த்ரஸேஷம் என்பர். இது ப்ரணவத்தின் விவரணமேயாம். ஜீவன் கர்த்தா என்றுலும் அவனது கர்த்ருத்வம் பராமாத்மாயத்தம். அஷ்டாக்ஷரத்திலுள்ள மூன்று பதங்களாலும் ஜீவனுடைய மூன்று வடிவங்களை அறியலாம்;

ப்ரணவத்தால் இவன் ஏம்பெருமானுக்கே அடிமைப்பட்டவன் என்றும், நடுப்பதத்தால் எம்பெருமானே இவனுக்கு உபாயம் என்றும், எம்பெருமானே இவனுக்கு பே$_4$ாக்$_3$யன் என்றும் தெரிந்து கொள்ளலாம். எம்பெருமானுக்கு இந்த சேதநன் பண்ணும் கைங்கர்யம் எல்லாக்காலமும், எல்லா இடத்திலும். எல்லாவிதமாகவும் பண்ணப்படுவதாகும். நான் எம்பெருமானுடைய சொத்து என்று அறிந்தவுடன் தன்னை எம்பெருமானுக்கு ஸமர்ப்பித்துவிடலாமே என்றால் "மம நாத$_2$" என்று ஆளவந்தார் அருளியபடி ஸமர்ப்பிக்கவும் தகுதி இல்லை என்றதாகிறது. ப$_4$க$_3$வானுக்கு அடிமைப்-பட்டிருப்பதில் ஆசை வளர்ந்து அது அவனடியார் திறந்திலும் செல்வதாலே ப$_4$க$_3$வானுக்கே அடிமை என்னும் தன்மைக்கு ஒருகுறையும் வாராது. "ப்ரணமம் யேபி குர்வந்தி தேஷாமபி நமோ நம:" என்பது முதலான ப்ரமாணங்களாலே இப்படிப்பட்ட ப$_4$ாக$_3$வதர்களுக்கு அடிமையாயிருப்பதும் ஜீவனுக்கு ஸ்வரூபாநுரூபம் என்று தெரிகிறது. இவ்வர்த்த$_2$த்தைத் திருமங்கையாழ்வாரும் "நின் திருவெட்டெழுத்தும் கற்று ... உற்றதும் உன் அடியார்க்கடிமை" என்று அருளிச்செய்தார்.

இனி த்$_3$வயப்ரகரணத்தின் ஸாரமான அர்த்த$_2$த்தைக் காண்போம். ஆசார்யருசிபரிக்$_3$ருஹீதமான த்$_3$வயமந்த்ரத்துக்கு நிரவதி$_4$கமான பெருமையை ஶாஸ்த்ரம் கூறும். ப்ரணவவிஹீநமானாலும் த்$_3$வயம் என்று சொல்லக்குறையில்லை. இதை அநுஸந்தி$_4$க்க தே$_3$ஶம் காலம் முதலிய நியமம் இல்லை. முதல் வாக்யத்திலுள்ள ஸ்ரீஶப்$_3$த$_3$த்துக்குப் பல பொருள்கள் சொல்லப்பட்டுள்ளன. "ஜ்யோத்ஸ்நேவ ஹிமதீ$_3$தி$_4$தே:" முதலிய ப்ரமாணங்களால் இவள் எம்பெருமானை எப்போதும் விட்டுப்பிரியாமல் இருப்பவள் என்று அறியலாம். இந்த நித்யஸம்பந்த$_4$த்தையே 'மதுப்' என்கிற ப்ரத்யயம் காட்டுகிறது. எம்பெருமானை நாம் ஆஶ்ரயிக்கும்போது புருஷகாரம் இன்றியமையாதது; ஆசார்யன் புருஷகாரம் செய்வது உண்மையேயாகிலும் ப்ரத$_4$ாநமாகப் பிராட்டிக்கே புருஷகாரத்வம் உள்ளது: "லக்ஷ்மீம் புருஷகாரேண" முதலிய ப்ரமாணங்களும் அவ்வாறே கூறுகின்றன. எம்பெருமான் ஸித்$_3$தே$_4$ாபாய-னாகவும், சேதநாங்கீ$_3$காரத்தில் நிரபேக்ஷனாயும் இருக்கிறான். ஆஶ்ரயணத்துக்குடலாக வாத்ஸல்யம் முதலிய குணங்களும், ஆஶ்ரிதகார்யத்துக்குடலாக ஜ்ஞாநஶக்த்யாதி$_3$கு$_3$ணங்களும் ஈஶ்வரனிடத்தில் இருக்கின்றன. இங்கே க்ருபை முதலான மற்ற குணங்களும் அநுஸந்தி$_4$க்கத்தக்கவை. ஸ்வரூபம், ரூபம் முதலிய குணங்களை நாராயணபத$_3$ம் சொல்லுமேயாகிலும் அவை இங்கே கூறப்படவில்லை. ஶரணம் என்று பரனுடைய உபாயத்வம் காட்டப்படுகிறது. பிராட்டியோடே கூடின ப$_4$க$_3$வானுக்கே உபாயத்வம் இருப்பதால் பிராட்டிக்கு உபாயப$_4$ாவத்தில் அந்வயம் உண்டோ என்று ஶங்கிக்கக்கூடும். அது இல்லை என்று நிஷ்கர்ஷம் செய்யப்படுகிறது. ப்ரபத்தி மாநஸிகம் முதலாக மூவகைப்படும். ப்ரபத்தி செய்பவர் ஆர்த்தர். த்$_3$ருப்தர் என இருவகை. ப்ரபத்தி ஒருமுறையே அநுஷ்டி$_2$க்கப்படும். இங்கே ஸ்ரீமத் என்பது சரணபத$_3$த்துக்கு அடைமொழியாகவுமாம்; ஸ்ரீமந் என்று பிரித்து விளியாகவு-மாம்.

அடுத்ததாக உத்தரவாக்யத்தால் ப்ரபத்தி ஸர்வப$_2$லங்களையும் அளிக்கவற்றானது என்று அறியலாம். பிராட்டியோடு கூடின பகவானே ப்ராப்யனாகிறான். பிராட்டிக்கு எம்பெருமானுடைய ஸ்வரூபம் குணம் முதலியவற்றில் அந்வயமுள்ளது. ஸர்வஸ்வாமியான நாராயணன் ப்ராப்யன் என்பது உத்தரவாக்யத்தில் முக்$_2$யார்த்த$_2$ம். நாராயணாய என்பதிலுள்ள நாலாம் வேற்றுமை ஸர்வதே$_3$ஶ-ஸர்வகால-ஸர்வாவஸ்தை$_2$யிலும் பண்ணப்படும் கைங்கர்யத்தைக் குறிக்கும். அஹங்காரமமகார-நிவ்ருத்தியை நமஶ்ஶப்$_3$த$_3$ம் காட்டும். ஆநுகூல்யஸங்கல்பம் முதலானதும் த்$_3$வயமந்த்ரத்தால் விளக்கப்படும்.

மூன்றுமதான சரமஶ்லோகப்ரகரணம் ப்ரபத்தியை விதிக்கும் ஶ்ருதிமேற்கோள்களோடு

தொடங்குகிறது. ப்ரபத்தி தன் பலனைக்கொடுத்தே தீரும்(அமோக$_4$மானது). அபி$_4$மதார்த்த$_2$ம் எதுவானாலும் ப்ரபத்தி அதற்கு ஸாத$_4$நமாகும். இதிஹாஸபுராணங்களில் பலரும் ப்ரபத்தியை அநுஷ்டி$_2$த்துப் பயன் பெற்றதாகக் காண்கிறோம். ஆனால் சரமச்லோகத்தில் விதிக்கப்படும் ஸர்வ-த$_4$ர்மபரித்யாக$_3$ம் என்பது ஸகலசாஸ்த்ரங்களோடும் விரோதி$_4$க்கிறதே! அநுஷ்டா$_2$நத்தோடும் சேரவில்லையே! கீதையில் இந்த ப்ரகரணத்துக்கும் விருத்$_3$த$_4$மாக உள்ளதே! செய்யக்கூடாது என்று சாஸ்த்ரம் தடுத்ததையும் செய்ய நேரிடுமே! இவ்வாறெல்லாம் ஏற்படும் கேள்விகளுக்குப் பலர் பலவாறு ஸமாத$_4$ாநம் சொல்ல முயன்றனர். ஸாக்ஷாத் ப$_4$க$_3$வானால் ஸ்ரீகீதையில் விதிக்கப்பட்ட ஸர்வத$_4$ர்மபரித்யாக$_3$ம் ப்ராமாணிகம் என்றே ஏற்றுக்கொள்ளவேணும். அதனால் சில அதி$_4$காரிகளுக்கு சரணாக$_3$தி என்றும் ஏனையோருக்கு கர்மஜ்ஞாநப$_4$க்திகள் என்றும் சிலர் சொன்னார்கள். ஸர்வ-த$_4$ர்மங்களையும் விட்டாகிலும் சரணாக$_3$தி பண்ணு என்று சிலர் பொருள் சொன்னார்கள். தேவதாந்தரங்கள் விஷயமான ஆராத$_4$நரூபகர்மங்களையே விடவேண்டும் என்று இன்னும் சிலர் கூறினார்கள். வேறே சிலர் சரணாக$_3$திக்கு விரோத$_4$மான த$_4$ர்மங்களையே விடவேண்டும் என்று அர்த்த$_2$ம் பண்ணினார்கள். மற்ற சிலர் கர்மம் மோக்ஷத்துக்குத் தடையாக சாஸ்த்ரங்களில் காணப்படு-வதால் கர்மத்தை விட்டு ஆத்மஜ்ஞாநத்தை ஸம்பாதிக்கவேண்டும் என்று பகன்றார்கள். இன்னும் சிலர் ஸர்வத$_4$ர்மங்களை விடாமல் அதற்கு ப்ராயச்சித்தமாக சரணாக$_3$தி பண்ணவேண்டும் என்று வாதிட்டார்கள். வேறு சிலர், த$_4$ர்மசாஸ்த்ரத்துக்கு லக்ஷணமான அதன் பலம் முதலியவற்றைப் பொருளாகக் கொண்டு பலத்தில் விருப்பமற்று த$_4$ர்மஸ்வரூபமாத்ரத்தை அநுஷ்டிக்கவேண்டும் என்றார்கள். மற்றும் சிலர் த$_4$ர்மசாஸ்த்ரத்தால் சாந்த்ராயணம் முதலிய ப்ராயச்சித்தங்களை அர்த்த$_2$மாகக் காட்டினார்கள். ப$_4$க்தியோக$_3$ம் பண்ணுமவர்களுக்கு அதின் அங்கங்களில் குறை ஏற்படாமல் அதற்கு ப்ராயச்சித்தம் ப்ரபத$_3$நம் என்றார்கள் வேறு சிலர்.

இவ்வாறான பசைபற்ற வாதங்களெல்லாம் தகுந்த ஆதாரங்களோடு தள்ளப்படுகின்றன. வேதம் முதலிய சாஸ்த்ரங்களில் முரண்பட்ட பல விதிகள் காணப்படுகின்றன. வேதத்தில் விதிக்கப்படும் எல்லா தர்மங்களையும் எல்லாரும் அநுஷ்டிக்கவேண்டும் என்பதில்லை. ஒவ்வொரு தர்மத்துக்கும் அதிகாரி வேறுவேறாக இருப்பதால் ஒரு தர்மத்துக்கு அங்கமாக விதிக்கப்படும் மற்ற தர்மத்யாகம் இந்த அதிகாரிக்குள்ள எந்த விதியோடும் விரோதியாது. உதாரணமாக ப்ரஹ்மசாரிக்குள்ள ஸமிதாத$_4$ாநம் முதலான தர்மங்கள் க்$_3$ருஹஸ்த$_2$னுக்கில்லையே! எனவே ஸர்வத$_4$ர்மபரித்யாக$_3$ம் என்பது பொருந்தக்கூடியதே.

கர்மம், ஜ்ஞாநம், பக்தி ஆகிய ஒவ்வொன்றும் தனித்தனியே ப$_4$க$_3$வல்லாப$_4$த்துக்கு உபாயமாகிறது. க்ஷேத்ரவாஸம், அவதாரரஹஸ்யஜ்ஞாநம் முதலியவையும் இம்மூன்றுக்குள்ளேயே அடங்கும். கர்மம் முதலியவை பலவகை என்பது மஹாபாரதத்திலிருந்து தெளிவாகத் தெரியவருகிறது. இந்த தர்மங்கள் தன் அபிமதமான பலத்தைப் பெறுவதற்கு ஸாதநமாகமாட்டா என்கிற ப்ரதிபத்தியே இங்குச் சொன்ன பரித்யாகத்தின் தாத்பர்யம். அப்படியானால் வர்ணாச்ரமத$_4$ர்மங்களையும் விட்டு விடவோ என்றால், "த்ரிவித$_4$ாம் பச்ய தே$_3$வேசோ க$_3$ஹநாம் கர்மணோ க$_3$திம்" இத்யாதி$_3$யாக இந்த்ரனைக்குறித்து லக்ஷ்மி பண்ணின உபதே$_3$சத்தால் நித்யத$_4$ர்மங்கள் அநுஷ்டே$_2$யங்கள் என்று தேறுகிறது. இங்கு "த்யக்த்வா" என்ற பதத்துக்கு 'விட்டு இருப்பானேயாகில்" என்று அநுவாத$_3$மாகக் கொள்ள வேணுமென்று சிலர் பொருள்சொன்னார்கள். அதுவும் பொருந்ாது. ஏனெனில், ப்ரபத்தி வேறு ஸாத$_4$நங்களை ஸஹியாது என்றுமிடம் இந்த "பரித்யஜ்ய" என்னும் பதத்தாலேயே அறியப்படுகிறது.

அடுத்து "மாம்" என்கிற பதத்தில் க்ருஷ்ணனுடைய ஸர்வகாரணத்வம், வாத்ஸல்யம், ஸௌலப்$_4$யம்

முதலான குணங்களோடு புருஷகாரயோகமும் காட்டப்படுகிறது. உபாயமும் உபேயமும் இவ்விடத்தில் ஒன்றே என்பதைக் காட்டுகிறது "ஏக"பதம். ஒரே பலத்தைத்தருவதால் உபாஸநமும், ப்ரபத₃நமும் ஒன்றே என்கிற ஶங்கை ஏற்படுகிறது; ஆனால் உபாஸகனுக்கு ப்ராரப்₃த₄கர்மம் முடியும்போதுதான் பலம்; ஶரணாகதனுக்கோ நடக்கும் பிறவியின் முடிவிலேயே முக்தி. எனவே ப்ரபத₃நம் உபாஸநத்தைக் காட்டிலும் சிறந்ததாகும். இப்படி சரமஶ்லோகத்தின் முந்தின அடியாலே, விடப்படும் உபாயத்தின் ஸ்வரூபமும், விடும் முறையும், எடுத்துக்கொள்ளும் உபாயவிஶேஷமும், அது வேறொன்றையும் எதிர்பாராமல் பலம் தரும் என்பதும், அதின் உபாயபா₄வமும், அதை ஸ்வீகரிக்கும் ப்ரகாரமும் ஆகியவை சொல்லப்பட்டன. இவ்வாறே உத்₃த₄வகீதையிலும் காட்டப்பட்டுள்ளது.

இப்படி எம்பெருமானை உபாயமாக வரித்த அதிகாரிக்கு இனிச்செய்யலாவதொன்றில்லை; அவன் க்ருதக்ருத்யன். இந்த ந்யாஸத்தையே ஒரு யஜ்ஞமாக உருவகப்படுத்தி, "தஸ்யைவம் விது₃ஷோ யஜ்ஞஸ்ய" என்று தொடங்கும் தைத்திரீய-அநுவாகத்தில் இவன் தானிருக்கும் இருப்பிலேயே ஸர்வகர்மங்களையும் செய்து முடித்தவன் என்று விவரிக்கப்படுகிறது. இதையே நம்மாழ்வாரும் "செய்த வேள்வியர்" என்று குறிப்பிடுகிறார். இது எவ்வாறு கூடும் என்று ஶங்கித்த நாரதபகவானுக்கு அஹிர்பு₃த்₄ந்யன் ஸமாத₄நம் கூறுவதாக ப₄க₃வச்ச₂ாஸ்த்ரத்திலும் காணலாம். ப்ரபந்நனுடைய பாபங்கள் ஒன்றுவிடாமல் நீங்குகின்றன என்பதை "ஸர்வபாபேப்₄ய:" என்னும் பதம் காட்டும். அப்படியானால் ப்ரபத்தி பண்ணின உடனேயே ஶரீரம் போய்விடவேண்டுமே? என்றால் ஆர்த்த-ப்ரபந்நனுக்கு உடனே மோக்ஷப்ராப்தி; த்₃ருப்தனுக்கு இந்த ஶரீரம் போனவுடன் முக்தி என்று வேறுபாடு. இந்த ப்ரபந்நனுக்கு மரணகாலத்தில் பகவானைப்பற்றிய சிந்தை இருக்கவேண்டும் என்கிற நிர்ப்பந்தமில்லை; அப்போது "அஹம் ஸ்மராமி" என்று எம்பெருமான் இவனை நினைத்துக் கொண்டு பரமமான கதியை அடைவிக்கிறான்.

"மோக்ஷயிஷ்யாமி" என்கிற பிறவினை (ணிச்) ஸூர்யனுக்கு முன்பு இருட்டுப்போலே பாபங்கள் தாமே அழியும் என்று காட்டுகிறது. இவ்வாறு பாபங்கள் நீங்கினவாறே ஸ்வரூபாவிர்பா₄வம் ஏற்படும்; ரத்நத்தின் மேலுள்ள அழுக்கைக் கழுவினால் அது தானே ப்ரகாஶிப்பதுபோலே கர்மம் நீங்கினவுடனே ஆத்மாவுக்கு ஏற்கனவே உள்ள அபஹதபாப்மத்வம் முதலிய குணங்கள் நன்கு விளங்கும். மற்ற உபாயங்களை விட்டு ஸித்தோபாயனை எம்பெருமானைப் பற்றுகையாலே ப்ரபத்தி துஷ்கரமன்று; ஶீலம் முதலிய குணங்களோடு சேர்ந்த உபாயம் நிரபேக்ஷம் என்பதாலே உபாயத்தில் குறை ஏதுமில்லை; உபாயமான எம்பெருமானுக்கு ஜ்ஞாநம், ஶக்தி முதலான குணங்களிருப்பதால் பலத்துக்கு அஸித்தி இல்லை; பாபங்கள் எல்லாம் நீங்கும் என்பதாலே பலம் தாமதிக்கும் என்பதில்லை. ஆகையால் ஶோகிப்பதற்கு இடமேயில்லை என்ற கருத்தில் "மா ஶுச:" என்று சொல்லப்பட்டது.

இங்கே இதற்கு முன் ஶ்லோகமான "மந்மநா ப₄வ" என்கிற ஶ்லோகத்தை "ஸர்வத₄ர்மாந்" என்கிற ஶ்லோகத்தோடு கூட்டி ப்ரபத்திக்குத் தேவைப்படும் ஆத்மநிக்ஷேபம் முதலானவற்றைச் சொல்லுவதாகச் சில ஆசார்யர்கள் திருவுள்ளம்பற்றியுள்ளார்கள். "ஏதத்₃வை மஹோபநிஷத₃ம் தே₃வாநாம் கு₃ஹ்யம்" என்று ந்யாஸரூபமான தபஸ்ஸை தேவர்களுக்கும் ரஹஸ்யமானது என்று உபநிஷத்திலே சொன்னபடியே கீதையிலும் "ஸர்வகு₃ஹ்யதமம்" என்று கீழே ரஹஸ்யமாகச் சொல்லப்பட்ட எல்லாவற்றைக்காட்டிலும் இது பரம ரஹஸ்யம் என்று கண்ணன் குறிப்பிடுகிறான். இவ்வாறாக பகவானாலே மிகவும் ஆதரத்தோடு விதிக்கப்பட்ட இந்த ஶரணாகதியானது யாவர்க்கும் தங்கள் அபிமதத்தைப் பெறுகைக்கும் ஆத்ம-உஜ்ஜீவநத்துக்காகவும் கைக்கொள்ளப்படும் என்று ப்ரதிபாதி₃க்கப்பட்டது.

நூறு ஆண்டுகளுக்கு முன்பு தெலுங்கு எழுத்தில் அச்சிடப்பெற்ற "தீ3பப்ரகாஶத்துடன் கூடிய தத்வதீ3பம்" என்னும் இந்நூல் இப்பொழுது மிகவும் ஶிதி2லமான நிலையில் உள்ளது. அரிய அர்த்த2விஶேஷங்களைக் கொண்ட இந்நூலை ரக்ஷிக்கவேண்டியது அனைத்து ஸ்ரீவைஷ்ணவர்களின் கடமையாகும். இப்போது இது ரக்ஷிக்கப்படாவிடில் எதிர்காலத்தினர் இந்நூலை நிரந்தரமாக இழக்கநேரிடும். இந்நிலையைத் தவிர்க்கும் சீரிய நோக்குடன் சில ஆண்டுகள் முன்பு தேவநாகரி-தமிழ் எழுத்தில் வித்வான் கீர்த்திமூர்த்தி திருப்பதி ஸ்ரீ.உ.வே. கிருஷ்ணமாசார்யஸ்வாமியால் எழுதப்பட்ட இந்நூலின் ஒரு பகுதியை அம்மஹநீயரிடமிருந்து வாங்கி, மஹாவித்வான் காரப்பங்காடு ஸ்ரீ.உ.வே வேங்கடாசார்யஸ்வாமியின் தௌஹித்ரரும், க்ரந்தஸம்ரக்ஷணத்தில் அத்விதீயமான கைங்கர்யங்களைச் செய்துவருபவருமான ஸ்ரீ.உ.வே. முரளிஸ்வாமி அடியேனிடம் தந்து கம்ப்யூடர் மூலமாக அச்சிடும்படி அடியேனை நியமித்தார். இவ்வாறாக தத்வதீ3பம் தே3வநாக3ரி எழுத்திலும், தீ3பப்ரகாஶம் தமிழ் எழுத்திலும் கம்ப்யூடர் மூலம் அச்சிடப்பெற்று இப்போது ப்ரகாஶிக்கப்படுகிறது.

இந்த க்3ரந்த2த்தில் மிகவும் பரிஶ்ரமப்பட்ட திருநாராயணபுரம் அரையர் வித்வான் ஸ்ரீ. உ. வே. ராமஶர்மா ஸ்வாமியின் குறிப்புகள் டிப்பணியாகக் கடைசியில் சேர்க்கப்பட்டுள்ளன. க்3ரந்த2த்தில் (*) குறி, அங்கு டிப்பணி உள்ளதைக் குறிக்கும். ஆழ்ந்து அநுபவிப்போருக்குத் தெளிவு பிறப்பிக்கும் இக்குறிப்புக்கள் மிகவும் இன்றியமையாதனவாக இருக்கும். எடுத்துக்காட்டாக திருமந்த்ரப்ரகரணத்தில் (பக்கம் 83) தத்த்வதீபத்தில் ஒரு வாக்யத்தில் திருவாய்மொழியின் பத்துப் பத்துக்களில் சொல்லப்படும் அர்த்த2ம் க்ரமமாக வர்ணிக்கப்படுகிறது என்று காட்டியிருக்கிறார். மைஸூரிலுள்ள ஓரியண்டல் நூல்நிலயத்திலிருக்கும் ஓலைச்சுவடிகளோடு ஒப்பிட்டுச் சில ஶ்லோகங்கள் டிப்பணியில் காட்டப்பட்டுள்ளன. இவற்றைப் பார்க்கும்போது இந்நூலாசிரியர் ஒவ்வொரு ப்ரகரணத்தையும் வெவ்வேறு தி3வ்யதே3ஶங்களில் எழுந்தருளியிருந்து பூர்த்தி செய்ததாகத்தெரிகிறது. த்3வய-ப்ரகரணத்தைத் திருநாராயணபுரத்திலும், சரமஶ்லோகப்ரகரணத்தைத் திருவெள்ளறையிலும் நிறைவேற்றியிருப்பது நோக்கத்தக்கது.

தெலுங்குலிபியிலான மூலக்ரந்தத்தைப் பல ஓலைப்ரதிகளை ஒப்பிட்டு வெளியிட்டுள்ளனர். ஆனால் இப்போது நமக்கு அவ்வாறான ஶ்ரமங்கள் இல்லாதுபோயினும் க்3ரந்த2ப்ரகாஶநத்தில் ஈடுபடும் அதி4காரிகள் து3ர்லப4ரானபடியாலே ப்3ரஹ்மப்ரயத்நமாகிவிட்டது. திறமைசாலிகள் பலர் நம் ஸமூஹத்தில் இருந்தும் பு3த்3தி4-ஶக்தி-ஸம்பத்திகளால் ஏழையான இவ்வெளியேனால் இப்பணி நிறைவேறப்பெறுவதே! அல்லது 'தே3ஶாவைஷ்கத்3ர்ஶியான இவனே இப்பணிக்குத்தக்கவன்' என்று ஸர்வஜ்ஞன் ஸங்கல்பித்தான்போலும்!

சுவரொட்டிகள், விளம்பரப்பலகைகள் என்று இதுமுதலானவைமூலம் தெலுங்கு எழுத்துக்களை அடியேன் படிக்கக் கற்றுக்கொண்டதே விந்தை. டைப்பிங் என்பது அடியோடு தெரியாதநிலையில் ஒவ்வொரு எழுத்தாகப்பார்த்து ஒரே விரலைக்கொண்டு தமிழ் ஸம்ஸ்க்ருதம் ஆகிய இருமொழி-களிலுமான இப்பெரிய புத்தகத்தை கம்ப்யூடரைவில் ஆக்கியது விந்தையிலும் விந்தை. தவறுகளைத் திருத்தப் பலமுறை நுட்பமாக ப்ரூப் பார்த்திருக்கிறேன். நிறுத்தக்குறிகள் நம் நாட்டு மொழிகளில் முன்பு இல்லாதுபோனாலும் எளிதில் பொருள் கொள்வதற்காக அவை உதவுவதால் அதிக-ஶ்ரத்தையோடு அவற்றைக் கையாண்டிருக்கிறேன். மூலநூலில் உள்ளதை ஓரெழுத்தும் மாறாமல் அப்படியே அச்சிடுவதே நோக்கமாகக் கொண்டு பிறந்த இந்நூல்வடிவம் இனி எதிர்காலத்தேவையைப் பூர்த்தி செய்யும் என்பது உறுதி. இதிலே கையாளப்பட்ட ப்ரமாணங்கள் யாவும் ஸம்ஸ்க்ருதத்தில் இருப்பதால் அவற்றின் ஆகரமும் ஸம்ஸ்க்ருதத்தில் (தத்த்வதீ3பத்தில்) மட்டும் தரப்பட்டுள்ளன.

இந்நூல் தயாராகிப்பல வருடங்கள் ஆகியும் போதிய உதவி இல்லாததால் வெளியிட முடியாமல் போயிற்று. எனினும் இப்போது மஹாவித்வான் கீர்த்திமூர்த்தி காரப்பங்காடு ஸ்ரீ. உ. வே. வேங்கடாசார்யஸ்வாமியின் ஸதாப்தி மஹோத்ஸவத்தின் அங்கமாக இது வெளியாவது மிகவும் சிறப்பானதே. ஆயிரத்துக்கும் மேற்பட்ட மணிதமணி நேரத்தை உள்ளடக்கிய இப்பணி இம்மஹநீயரின் மஹோத்ஸவத்தில் வெளியிடப்பெற்று அடியேனை ஸப்ருதஸத்தாகனுக ஆக்குகிறது.

தெளிவான பெரிய எழுத்துக்களில் அச்சிடப்பெற்ற இந்நூலில், ஸம்ஸ்க்ருதபதங்களைத் தமிழில் ஸுலபமாக வாசிக்க உதவும் வகையில் வர்க்கக்குறியீடுகள் தரப்பட்டுள்ளன. காலக்ஷேபரீதியில் கசடறக் கேட்டு, அநவரதமும் அநுஸந்தித்து ஆயுட்காலம் முழுதும் அநுஷ்டாநத்தில் கொள்ளப்பட வேண்டிய நெறிகளைக்காட்டும் இந்நூலை வெளியிடுவதன் மூலம் நாம் இன்புறுவோம்.

இதே ஆசிரியர் அருளிய தத்த்வநிரூபணம் என்னும் இன்னொரு அரிய நூலும் இத்தோடு வெளியிடப்படுகிறது. ஏழு அதிகாரங்கள் கொண்ட இதில் உலகின் படைப்பு, காப்பு, அழித்தல் முதலிய விஷயங்களோடு உலகின் அமைப்பு மிக விரிவாகத் தரப்பட்டுள்ளது. பல புராணங்களின் ஆதாரங்களைக் கொண்டு நாம் எளிதில் அறிந்துகொள்ளும் வகையில் அர்த்தங்களைத் தொகுத்து அளித்திருக்கிறார். இறுதியில் பரதத்வநிரூபணம் ஸங்க்ரஹமாகப் பண்ணப்பட்டுள்ளது. ஸகலசாஸ்த்ரங்களும் எம்பெருமானையே ப்ரதிபாதிக்கின்றன என்பதே இந்நூலின் குறிக்கோள். நையாயிகர்கள் கரணப்ராமாண்யம் சொல்லுவர்கள்; ஆனால் ஜ்ஞாநப்ராமாண்யமே ஸித்தாந்திகளுக்கு (நமக்கு) அபிமதம் என்று முதலிலேயே அருளிச்செய்திருப்பது நோக்கத்தக்கது. எனவேதான் ப்ரத்யக்ஷம் - அபரோக்ஷமாகப்பிறக்கும் ஜ்ஞாநம் என்று (பக்கம் 2) அருளியிருக்கிறார். இந்த க்ரந்தத்தின் (தெலுங்கு)பதிப்பாசிரியர்கள் விரிவான விஷயஸூசிகையோடு, ஆங்காங்கே விளக்கமான குறிப்புகளும் தந்திருக்கிறார்கள். அவை { } என்கிற அடைப்புக்குறிகளில் தரப்பட்டுள்ளன.

இதற்கு ப்ரூப் பார்க்க உதவிய வித்வான் திருப்புல்லாணி ஸ்ரீ. உ. வே. ஸுந்தரராஜஐயங்கார் ஸ்வாமிக்குத் தலையல்லால் கைம்மாறிலேன். அந்தந்த நிலைகளில் இந்நூல் வெளியாக உதவிய வானமாமலை வித்வான் ஸ்ரீ.உ.வே. க்ருஷ்ண அய்யங்கார் ஸ்வாமி, வங்கீபுரம் ஸ்ரீ.உ.வே. ஜகந்நாதாசார்யஸ்வாமி, வங்கீபுரம் ஸ்ரீ.உ.வே. ஸ்ரீயநாராயணாசார்யஸ்வாமி ஆகியோருக்கும் அடியேனுடைய க்ருதஜ்ஞதையைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

ஏற்கனவே பிள்ளைலோகாசார்யரின் 'ஸ்ரீவசநபூஷணம்', விளாஞ்சோலைப்பிள்ளையின் 'ஸப்தகாதை', யாமுநாசார்யரின் 'தத்வபூஷணம்', குன்றத்தூர் ஜீயரின் 'நாயமாத்மா பாஷ்யம்' முதலான பூர்வாசார்யக்ரந்தங்களும், பல மஹநீயர்களின் கட்டுரைகளும் வெளிவந்த நமது ஸ்ரீவைஷ்ணவ ரத்நமாலா வரிசையில் இருபத்தெட்டாவது ரத்நமாக ஒளிருகிறது இந்நூல். ஸ்ரீவைஷ்ணவர்கள் அனைவரும் இந்நூலை ஆதரித்துப் பயன்பெறுமாறு எம்பெருமான் அருள் புரிவானாக.

ஸ்ரீவைஷ்ணவதாஸன்
கோயில் ஆத்தான் விஜயராகவன்

श्रीः

श्रीमते रामानुजाय नमः
श्रीवादिकेसरि सुन्दरजामातृमुनिभिरनुगृहीतं

## ॥ नृसिंहाष्टकम् ॥

श्रीमदकलङ्कपरिपूर्णशशिकोटिश्रीधरमनोहरसटापटलकान्त ।
पालय कृपालय भवांबुधिनिमग्नं दैत्यवरकाल नरसिंह नरसिंह ॥

पादकमलावनतपातकिजनानां पातकदवानल पतत्रिवरकेतो ।
भावनपरायण भवार्तिहरया मां पाहि कृपयैव नरसिंह नरसिंह ॥

तुङ्गनखपङ्क्तिदलितासुरवरासृक्पङ्कनवकुङ्कुमविपङ्किलमहोरः ।
पण्डितनिधान कमलालय नमस्ते पङ्कजनिषण्ण नरसिंह नरसिंह ॥

मौलिषु विभूषणमिवामरवराणां योगिहृदयेषु च शिरस्सु निगमानाम् ।
राजदरविन्दरुचिरं पदयुगं ते धेहि मम मूर्ध्नि नरसिंह नरसिंह ॥

वारिजविलोचन मदन्तिमदशायां क्लेशविवशीकृतसमस्तकरणायाम् ।
एहि रमया सह शरण्य विहगानां नाथमधिरुह्य नरसिंह नरसिंह ॥

हाटककिरीटवरहारवनमालातारराशनामकरकुण्डलमणीन्द्रैः ।
भूषितमशेषनिलयं तव वपुर्मे चेतसि चकास्तु नरसिंह नरसिंह ॥

इन्दुरविपावकविलोचन रमायाः मन्दिर महाभुजलसद्वररथाङ्ग ।
सुन्दर चिराय रमतां त्वयि मनो मे नन्दितसुरेश नरसिंह नरसिंह ॥

माधव मुकुन्द मधुसूदन मुरारे वामन नृसिंह शरणं भव नतानाम् ।
कामद घृणिन् निखिलकारण नयेयं कालममरेश नरसिंह नरसिंह ॥

अष्टकमिदं सकलपातकभयघ्नं कामदमशेषदुरितामयरिपुघ्नम् ।
यः पठति सन्ततमशेषनिलयं ते गच्छति पदं स नरसिंह नरसिंह ॥

॥ इति नृसिंहाष्टकं समाप्तम् ॥

श्रीः

श्रीमते रामानुजाय नमः

# तत्वदीपविषयसूचिका

## प्रथमप्रकरणम्


| | पुटम् | |
|---|---|---|
| 1. | 1 | ग्रन्थोपोद्घातघट्टः |
| 2. | 5 | अष्टाक्षरस्य सर्वमन्त्राधिक्यसमर्थनम् |
| 3. | 10 | अष्टाक्षरस्य अक्षरपदक्रमव्यवस्था |
| 4. | 11 | मन्त्राणां वैदिकतान्त्रिकभेदनिरूपणम् |
| 5. | 12 | अष्टाक्षरप्रधानप्रतिपाद्यार्थनिरूपणम् |
| 6. | 13 | अकारार्थनिरूपणम् |
| 7. | 15 | अकारस्य कारणपरत्वनिरूपणम् |
| 8. | 17 | अकारवाच्यस्य नारायणत्वसमर्थनम् |
| 9. | 18 | अकारवाच्यस्य श्रियः पतित्वसमर्थनम् |
| 10. | 20 | लक्ष्म्याः कारणत्वाद्यन्वयविचारः |
| 11. | 21 | लक्ष्म्याः कारणत्वाद्यनन्वयसमर्थनम् |
| 12. | 22 | अनवधिकातिशयशेषित्वसमर्थनम् |
| 13. | 23 | अकारवाच्यस्य उपायोपेयरूपत्वम् |
| 14. | 24 | उक्तार्थस्य वेदान्तसम्मतत्वसमर्थनम् |
| 15. | 26 | उकारार्थविचारारम्भः |
| 16. | 26 | उकारस्य अनन्यार्हताप्रतिपादकत्वम् |
| 17. | 26 | उकारस्य अनन्यार्हताप्रतिपादनपरत्वम् |
| 18. | 29 | मकारार्थविचारः |
| 19. | 32 | मकारेण अचिद्बोधनप्रकारः |
| 20. | 33 | जीवपराऽसाधारणसंबन्धनिरूपणम् |
| 21. | 35 | आत्मापहारप्रायश्चित्तोपपादनम् |
| 22. | 36 | शेषत्वज्ञानस्य सर्वकर्मज्ञानरूपत्वम् |
| 23. | 37 | श्रुत्युक्तैक्यस्य प्रणवार्थनिबन्धनत्वम् |
| 24. | 37 | प्रणवस्य अपृथक्सिद्धसंबन्धपरत्वम् |
| 25. | 40 | उकारस्य लक्ष्मीवाचकत्वम् |
| 26. | 40 | प्रणवस्य ब्रह्मपरत्वप्रश्नः |
| 27. | 42 | नमश्शब्दार्थविचारप्रारम्भः |
| 28. | 43 | नमसः अत्यन्तपारतन्त्र्यपरत्वम् |
| 29. | 43 | अहङ्कारममकारस्वरूपनिरूपणम् |

30. 45 नमसोऽहङ्कारममकारनिवर्तकत्वम्
31. 46 मकारस्य षष्ठ्यन्तत्वोपपत्तिः
32. 47 चेतनकर्तृत्वस्येश्वराधीनत्वसमर्थनम्
33. 48 नमसः प्रपदनप्रकाशकत्वनिरूपणम्
34. 50 त्यागप्रपदनपदयोः पर्यायत्वनिरूपणम्
35. 51 नमसः भक्तिपरत्वाभावसमर्थनम्
36. 52 नमसः अङ्गषट्कयुक्तत्वनिरूपणम्
37. 53 नमसः परमात्मपरत्वनिरूपणम्
38. 54 नारायणपदार्थविचारारम्भः
39. 55 नारायणपदस्योपायोपेयपरत्वम्
40. 56 नरशब्दस्याऽपरिणामित्वाऽणुपरिमाणत्वपरत्वम्
41. 58 नारायणशब्दस्य सर्वविधबन्धुत्वपरत्वम्
42. 59 बहुव्रीहिपक्षे अर्थयोजना
43. 61 नारायणस्य सर्वशब्दवाच्यत्वम्
44. 61 जगतः परमात्मशरीरत्ववर्णनम्
45. 62 नारायणस्याऽप्रच्युतोभयलिङ्गत्वम्
46. 64 नारायणस्य जगत्कारणत्वप्रतिपादनम्
47. 65 नारायणस्यैव जगत्कारणत्वप्रतिपादनम्
48. 65 नारायणस्य सर्वविधकारणत्ववर्णनम्
49. 66 निमित्तोपादानयोरैक्यप्रतिपादनम्
50. 68 नारायणस्य सर्वात्मकत्वप्रतिपादनम्
51. 69 स्वरूपतो नित्यवस्तुसङ्कीर्तनम्
52. 70 प्रवाहतो नित्यवस्तुसङ्कीर्तनम्
53. 72 नित्यानामपि भगवदिच्छाधीनसत्ताकत्वम्
54. 72 तत्पुरुषसिद्धा बहिर्व्याप्तिः
55. 73 बहुव्रीहिसिद्धा अन्तर्व्याप्तिः
56. 75 व्याप्तिद्वयस्य सप्रमाणता
57. 75 प्रकारान्तरेण नारशब्दार्थनिर्वचनम्
58. 77 लक्ष्म्याः अणुत्वसमर्थनम्
59. 78 भगवतो जीवान्तर्व्याप्तिसमर्थनम्
60. 79 नारायणस्यैव परमात्मपदार्थत्वम्
61. 80 मन्त्रशेषस्य प्रणवविवरणप्रकारः
62. 81 जीवकर्तृत्वादीनां भगवदायत्तत्वम्
63. 83 एतत्पदत्रयोक्तं विरोधिव्यावृत्तमाकारत्रयम्

64. 84 एषां त्रयाणां पदानां एकवाक्यत्वम्
65. 85 कैङ्कर्यस्य सनातनत्वादिनिरूपणम्
66. 85 मतान्तरेणाऽस्य स्वरूपपरत्ववर्णनम्
67. 87 भरसमर्पणस्याऽनुपपन्नत्वनिरूपणम्
68. 89 भगवद्विभूतिशेषत्वशोधनम्
69. 91 भागवतशेषत्वेप्यनन्यार्हत्वाविरोधः
70. 91 भागवतशेषत्वे प्रमाणानि
71. 93 भागवतानां जात्याद्यनादरेण सर्वोत्कृष्टता
72. 94 भागवतानां सर्वपावनकरत्वादिनिरूपणम्
73. 95 भागवतवैभवनिरूपणम्
74. 96 भागवतानां शेषित्वादिनिरूपणम्
75. 96 भागवतशेषत्वे प्रमाणम्

## द्वितीयप्रकरणम्

1. 99 आचार्याभिमाननिष्ठावैभवम्
2. 101 आचार्ये भगवत्तुल्यप्रतिपत्त्यतिशयः
3. 102 द्वयमन्त्रमाहात्म्यप्रतिपादनम्
4. 109 मन्त्ररत्नस्य द्वयशब्दानभिधेयत्वशङ्कनम्
5. 110 प्रणवविहीनमन्त्ररत्नस्य द्वयत्वसमर्थनम्
6. 112 अस्य सर्वाधिकारत्वपक्षे देशकालाद्यनियमः
7. 113 सङ्क्षेपेण वाक्यद्वयार्थकथनम्
8. 114 श्रीमत्पदार्थनिरूपणारम्भः
9. 115 श्रीशब्दार्थनिरूपणम्
10. 117 श्रियः भगवत्स्वरूपरूपादिष्वन्वयवर्णनम्
11. 122 सप्रमाणं मतुबर्थनिरूपणम्
12. 122 भगवदाश्रयणे पुरुषकारावश्यकत्वम्
13. 123 आचार्यादपि श्रिय एव पुरुषकारत्वसमर्थनम्
14. 125 श्रियः पुरुषकारकरणप्रकारः
15. 126 श्रिय एवाऽतिशयेन पुरुषकारत्वम्
16. 127 उपायस्याऽसिद्धत्वसापेक्षत्वप्रसङ्गः
17. 129 अस्योपायस्य सिद्धत्वनिरपेक्षत्वसमर्थनम्
18. 129 वात्सल्यनिरूपणम्
19. 130 सौशील्यसौलभ्यनिरूपणम्

20. 131 आश्रितपराधीनत्वनिरूपणम्
21. 133 अर्चावतारस्य प्राप्यत्वोपास्यत्ववर्णनम्
22. 133 ज्ञानशक्त्यादिनिरूपणम्
23. 135 पूर्तिप्राप्तिस्वरूपनिरूपणम्
24. 136 प्राप्तिस्वामित्वयोर्भेदवर्णनम्
25. 137 उक्तगुणैस्सह कृपाया अनुसन्धेयत्वम्
26. 139 उक्ताकारेण नारायणपदार्थस्य श्रौतत्वम्
27. 140 अत्र अन्येषां गुणानुसन्धानक्रमः
28. 141 अत्र नारायणपदार्थसङ्कोचे मानम्
29. 142 अत्र एवंविधगुणानुसन्धाने भाष्यकारसंवादः
30. 143 चरणपदविचारारम्भः
31. 145 शरणपदार्थविचारारम्भः
32. 145 लक्ष्मीविशिष्टस्यैवोपायत्वशङ्कनम्
33. 146 देवादपि देव्याश्शरण्यत्वाधिक्यम्
34. 148 देव्या अपि देवस्य शरण्यत्वे न्यूनताप्रतिपादनम्
35. 149 देवादपि देव्याश्शरण्यत्वाधिक्यम्
36. 149 लक्ष्मीविशिष्टस्यैव उपायत्वबोधकप्रमाणानि
37. 151 मध्ये लक्ष्म्या उपायत्वाऽसम्भवशङ्कनम्
38. 152 लक्ष्म्या अनुपायत्वसमर्थनम्
39. 153 देव्याः कारुण्यरूपत्ववर्णनम्
40. 154 क्रियापदस्य प्रपत्तिपरत्ववर्णनम्
41. 156 प्रपत्तेर्मानसिकादिभेदेन त्रिविधत्वम्
42. 157 कायिकप्रपत्तिभेदनिरूपणम्
43. 157 आर्तदृप्तप्रपन्नविभागः
44. 159 प्रपत्तेस्सकृदनुष्ठेयत्वम्
45. 160 श्रीमच्छब्दस्य चरणविशेषणत्वपक्षः
46. 160 श्रीमत्पदस्य सम्बुद्ध्यन्तत्वपक्षः
47. 162 सम्बुद्ध्यन्तत्वपक्षेऽपि षट्पदत्वोपपत्तिः
48. 163 उत्तरवाक्ये प्रपत्तेस्सर्वफलप्रदत्वम्
49. 163 भक्तिप्रपत्त्यधिकारिचातुर्विध्यम्
50. 165 उत्तरवाक्ये श्रीशब्दार्थविचारः
51. 171 उत्तरवाक्ये मतुप्प्रत्ययार्थविचारारम्भः
52. 171 लक्ष्मीविशिष्टस्यैव प्राप्यत्वकथनम्
53. 171 भगवत्स्वरूपादि लक्ष्मीवैशिष्ट्यप्रयुक्तत्वम्

54. 172 भगवत्स्वरूपादिवैलक्षण्यस्य लक्ष्म्यायत्तत्वम्
55. 176 लक्ष्म्याः भगवत्स्वरूपान्वयः
56. 177 लक्ष्म्याः भगवद्रूपगुणयोरन्वयवर्णनम्
57. 178 लक्ष्म्याः भगवद्विभूत्यन्वयवर्णनम्
58. 180 लक्ष्म्याः भगवत्कृतजगद्व्यापारान्वयः
59. 181 देव्यधीनदेवस्वरूपादिभोग्यत्वकथनम्
60. 182 प्रधानतया अनुसन्धेयनारायणपदार्थः
61. 183 चतुर्थ्यर्थविचारारम्भः
62. 185 चतुर्थ्याः कैङ्कर्यवाचकत्वम्
63. 186 कैङ्कर्यस्य सर्वकालादिविशिष्टत्वे गमकम्
64. 187 उक्तकालवैशिष्ट्यादैश्वर्यव्यावृत्तिः
65. 189 सर्वावस्थकैङ्कर्यनिरूपणम्
66. 189 ईश्वरस्य दण्डयितृत्वादेरदोषत्वम्
67. 191 सर्वविधकैङ्कर्यनिरूपणम्
68. 192 शेषस्य शेषिच्छन्दानुवर्तित्वावश्यकता
69. 192 नमसोऽहङ्कारममकारनिवृत्तिवाचकत्वम्
70. 194 अत्र आनुकूल्यसङ्कल्पाऽन्वयप्रकारः
71. 194 प्रातिकूल्यवर्जनरक्षकत्वविश्वासान्वयप्रकारः
72. 196 गोप्तृत्ववरणाऽऽत्मनिक्षेपान्वयप्रकारः
73. 197 द्वितीयप्रकरणार्थनिगमनम्

## तृतीयप्रकरणम्

1. 199 प्रपत्तेरनुष्ठानप्रतिपादनपराश्श्रुतयः
2. 201 प्रपत्तेरमोघत्वप्रदर्शनम्
3. 202 प्रपत्तेरनुष्ठानप्रकारः
4. 211 सर्वधर्मत्यागे अनुष्ठानविरोधः
5. 211 सर्वधर्मत्यागे गीताविरोधः
6. 212 सर्वधर्मत्यागे निषिद्धाचरणप्रसङ्गः
7. 214 प्रपत्तेः कतिपयाऽधिकारनिरासः
8. 215 धर्मपदस्याऽप्रस्तुतधर्मपरत्वव्युदासः
9. 216 कर्मणां मोक्षविरोधित्वनिरासः
10. 218 प्रपत्तेः प्रायश्चित्तरूपत्वव्युदासः
11. 219 धर्मपदस्य तत्फलादिलाक्षणिकत्वे दोषः
12. 219 धर्मपदस्य तत्फलपर्यन्तत्वनिरासः

13. 221 धर्मपदस्य भक्त्यङ्गपरत्वव्युदासः
14. 222 धर्मविधितत्त्यागविध्योरविरोधः
15. 223 यथाश्रुते श्रुतीनामन्योन्यविरोधः
16. 227 अस्य पृथगुपायत्वे गीताभाष्याऽविरोधः
17. 228 कर्मादीनां प्रत्येकमुपायत्ववर्णनम्
18. 229 कर्मादीनां प्रत्येकं बहुविधत्वम्
19. 230 देशवासादीनां कर्मादिष्वन्तर्भावः
20. 230 कर्मादीनां बहुविधत्वे संवादः
21. 233 सर्वशब्दार्थनिरूपणम्
22. 234 त्यागप्रकारनिरूपणम्
23. 234 त्यागविध्यावश्यकत्वम्
24. 235 निषिद्धानुष्ठानापत्तिपरिहारः
25. 237 वर्णाश्रमादीनां परित्याज्यत्वशङ्कनम्
26. 238 वर्णाश्रमधर्माणामवश्यानुष्ठेयत्वम्
27. 240 वर्णाश्रमधर्माणामनुष्ठानप्रकारः
28. 242 परिशब्दार्थनिरूपणारम्भः
29. 242 प्रायश्चित्ताधिकारनिरूपणम्
30. 244 धर्मत्यागेऽनुवादकत्वशङ्कनम्
31. 245 धर्मत्यागस्य विधेयत्वसमर्थनम्
32. 247 शरण्यवाचकमामित्यस्यार्थनिरूपणम्
33. 249 मामित्यस्यानुसन्धेयार्थविशेषवर्णनम्
34. 250 मामित्यस्य वात्सल्याद्यर्थविशेषप्रदर्शनम्
35. 251 मामित्यस्य सर्वज्ञत्वाद्यर्थप्रदर्शनम्
36. 252 मामित्यस्य पुरुषकारवैशिष्ट्यसूचकत्वम्
37. 254 एकपदार्थविचारः
38. 255 शरणपदवैयर्थ्यशङ्कनम्
39. 256 व्रजेत्यस्य उपायवरणपरत्वम्
40. 256 शरणपदस्य करणत्वरूपोपायपरत्वम्
41. 257 भक्तिप्रपत्त्योर्भेदसमर्थनम्
42. 259 शरणागतेरधिकारिसमर्थनम्
43. 260 भक्तिप्रपत्त्योस्तुल्यविकल्पत्वसमर्थनम्
44. 261 भक्त्यपेक्षया प्रपत्तेराधिक्यम्
45. 263 प्रपत्तेर्गौणत्वशङ्कानिराकरणम्
46. 264 भक्तिप्रपत्त्योः कर्तृभेदाद्व्यवस्थितविषयत्वम्

47. 265 पूर्वार्धेन षडर्थसङ्ग्रहः
48. 266 साधनान्तरपरित्यागसमर्थनम्
49. 267 अहम्पदार्थविचारः
50. 268 त्वाशब्दार्थविचारः
51. 268 प्रपन्नस्य यज्ञरूपत्वनिरूपणम्
52. 270 प्रपन्नस्य न्यासेनैव कृतकृत्यत्वम्
53. 272 सर्वपापेभ्य इत्यस्याऽर्थविचारः
54. 273 प्रपन्नस्य निश्शेषतः पापनिवृत्तिकथनम्
55. 275 मोक्षयिष्यामीत्यस्यार्थविचारः
56. 276 प्रपन्नस्याऽन्तिमस्मृतिनिरपेक्षत्वम्
57. 277 णिच्प्रत्ययार्थविचारः
58. 278 माशुचइत्यस्यार्थविचारः
59. 279 शोकनिषेधस्य फलसिद्धिनिबन्धनत्वम्
60. 280 न्यासस्य सर्वगुह्यतमत्वकथनम्
61. 282 प्रपत्तेर्महत्त्वपारम्ययोर्निरूपणम्
62. 283 मन्मनाभवेतिश्लोकार्थविचारः
63. 285 श्लोकद्वयेन वरणसमर्पणकथनम्
64. 285 निक्षेपस्य प्राधान्यात्प्रथमविधानम्
65. 287 चरमोपायाधिकारिशोधनम्
66. 288 चरमश्लोकार्थनिगमनम्

श्रीः

श्रीमते रामानुजाय नमः

श्री वादिकेसरि सुन्दरजामातृमुनिविरचितः

# तत्त्वदीपः

## प्रथमप्रकरणम्

सुन्दरजामातृमुनेः प्रपद्ये चरणाम्बुजम् ।
संसारार्णवसम्मग्नजन्तुसन्तारपोतकम् ॥
अस्मद्गुरुभ्यस्तेषाञ्च गुरुभ्यो विदधे नमः ।
निदधे च शिरस्याद्यगुरोः पादौ श्रियःपतेः ॥ 1 ॥
अस्मद्गुरुदयायातयतीन्द्राङ्गीक्रियाश्रयः ।
लभेय लब्धविज्ञानो लक्ष्मीपतिपदद्वयम् ॥ 2 ॥

मन्त्रद्वयोत्तमश्लोकविषयोर्थ(विवेचकः - पा)प्रदर्शकः ।
गुरुस्नेहदशारूढस्तत्त्वदीपः प्रकाश्यते ॥ 3 ॥

---

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

வாதி3கேஸரி அழகியமணவாளஜீயர் அருளிச்செய்த

# தத்த்வதீ3பப்ரகாஶம்

“அஸ்மத்3கு3ருப்4யஸ்தேஷாஞ்ச கு3ருப்4யோ வித3தே4 நம:। நித3தே4 ச ஶிரஸ்யாத்3ய-கு3ரோ: பாதௌ3 ஶ்ரிய: பதே:” என்று ஸ்வாசாரயபரமாசார்யாநுவர்த்தநபூர்வகமாக பரமகு3ருபூ4தனை ஶ்ரிய:பதிதிருவடிகளை ஆஶ்ரயித்து; 1

“அஸ்மத்3கு3ருத3யாயாதயதீந்த்3ராங்கீ3க்ரியாஶ்ரய:। லபே4ய லப்3த4விஜ்ஞாநோ லக்ஷ்மீபதிபத3த்3வயம்” என்று ஸ்வாசார்யத3யாபூர்வகமாக பா4ஷ்யகாரருடைய அங்கீ3-காரத்தைப்பெற்று லப்3த4ஸ்வரூபஜ்ஞாநனாய், லக்ஷ்மீபதியினுடைய திருவடிகளைப் பெறுவேனாகவேணுமென்று கு3ருபரம்பராஶ்ரயணத்துக்கு ப்ரயோஜநத்தைச் சொல்லி; 2

"மந்த்ரத்3வயோத்தமஶ்லோகவிஷயோர்த்த2ப்ரத3ர்ஶக:। கு3ருஸ்நேஹத3ஶாரூட4ஸ்-தத்த்வதீ3ப:ப்ரகாஶ்யதே" என்று - திருமந்த்ரம் த்3வயம் சரமஶ்லோகம் இவற்றை விஷயமாகவுடைத்தாய், இவற்றினுடைய அர்த்த2த்தை விவேகித்து ப்ரகாஶிப்பிப்ப-தாய், ஆசார்யஸ்நேஹத்தினுடைய த3ஶையின் முடிந்த நிலத்திலே தோற்றுவதான தத்த்வதீ3பமென்று பேரான ரஹஸ்யவ்யாக்2யாநம் ப்ரகாஶிப்பிக்கப்படுகிறதென்று கர்த்தவ்யமான வஸ்துநிர்த்தே3ஶத்தைப் பண்ணி; 3

**तत्रार्थतत्त्वमाचार्याद्यथामति यथाश्रुतम् ।**
**वर्ण्यते मननार्थाय मतोह्यर्थः स्थिरो भवेत् ॥ 4 ॥**

## उपोद्घातः

**अयं जीवात्मा स्वयं नित्यनिर्मलज्ञानानन्दैकस्वरूपः स्वाभाविकज्ञातृत्वकर्तृत्वभोक्तृत्वस्वरूपधर्मः भगवदायत्तस्वरूपस्थितिप्रवृत्तिकतया तच्छरीरत्वेन तदनन्यार्हशेषत्वादिरूपस्वासाधारणाकारः सर्वप्रकारतत्पारतन्त्र्ययुक्ततद्दास्यैकरसः तदनुभवजनितनिरवधिकातिशयनित्यानन्दयोगयोग्योऽपि गुणत्रयात्मिकतया क्षणक्षरणस्वभावया तमःप्रकृत्यनृताऽविद्याद्यपरनामधेयया अनाकलितमूल-सम्बन्धया तिलतैलवत् दारुवह्निवत् दुर्विवेचमभिव्याप्तया दुरत्ययभगवन्मायया तिरोहितस्वप्रकाशः अनाद्यज्ञानान्धतया अन्यथाज्ञानविपरीतज्ञानयुक्तः तत्कृतरागद्वेषादिदूषितः तदुचितानि विधिनिषेध-विषयाणि कर्माणि कुर्वाणः तदनुगुणवासनावासितः तद्बलसंवर्धितः विशृङ्खलविपरीतरुचिः तदुपचित-**

---

"தத்ரார்த்த$_2$தத்த்வமாசார்யாத் யத$_2$ாமதி யத$_2$ாஶ்ருதம் । வர்ண்யதே மநநார்த்த$_2$ாய மதோ ஹ்யர்த்த$_2$: ஸ்தி$_2$ரோ ப$_4$வேத்" என்று அந்த ரஹஸ்யத்ரயத்தில் அர்த்த$_2$-யாத$_2$ாத்ம்யமானது ஶ்ரோதாவினுடைய பு$_3$த்$_3$த்$_4$யநுரூபமாக ஆசார்யமுக$_2$த்தால் உண்டான ஶ்ருதத்தைத் தப்பாதபடி ஶ்ருதார்த்த$_2$மநநம் ப்ரயோஜநமாகச் சொல்லப் படுகிறது, மநநம் பண்ணப்பட்ட அர்த்த$_2$மிறே நிலைநிற்கிறதென்று க்$_3$ரந்த$_2$நிர்மா-ணத்தினுடைய ஆப்தத்வத்தையும் ப்ரயோஜநத்தையும் சொல்லிற்றாய்த்து.

### அவதாரிகை

அநந்தரம், வக்தவ்யமான ரஹஸ்யங்கள் ஸ்வரூபயாத$_2$ாத்ம்ய-தத$_3$நுரூபாநுஷ்ட$_2$ாந-ப்ரகாஶகமாகையாலே இதினுடைய ப்ரவ்ருத்திக்கு உபயுக்தமான ஆத்மஸ்வரூபம் இருக்கும்படி ப்ரத$_2$மத்திலே அறியவேணுமிறே. அதாவது, நிஷ்கருஷ்டஸ்வரூபனான இவ்வாத்மா நித்யநிர்மலமான ஜ்ஞாநாநந்த$_3$ங்களை வடிவாகவுடையனாய், ஜ்ஞாத்ரு-த்வகர்த்ருத்வபோ$_4$க்த்ருத்வங்களாகிற ஸ்வாப$_4$ாவிகஸ்வரூபத$_4$ர்மங்களையுடையனாய், ப$_4$க$_3$வத$_3$ாயத்தமான ஸ்வரூபஸ்தி$_2$திப்ரவ்ருத்திகளை உடையனாகையாலே தச்ச$_2$ரீர-த்வமடியாக வந்த ததே$_3$கஶேஷத்வம், ததே$_3$கநியாம்யத்வம், ததே$_3$கத$_4$ார்யத்வமாகிற ஸ்வாஸாத$_4$ாரணவேஷத்தை உடையனாய், இப்படி ஸர்வப்ரகாரதத்பாரதந்த்ர்யயுக்த-மான தத்$_3$த$_3$ாஸ்யமொன்றிலுமே ப்ரீதியையுடையனாய், ஸர்வப்ரகாரபரிபூர்ணப$_4$க$_3$வ-த$_3$நுப$_4$வத்தாலே ஜநிதமான அநவதி$_4$காதிஶயமான ஆநந்த$_3$த்தினுடைய நித்ய-ப்ராப்திக்கு யோக்$_3$யனாயிருக்கச்செய்தேயும் ஸத்த்வரஜஸ்தமோரூபமான குண-த்ரயங்களை வடிவாகவுடைத்தாய், ஸர்வகாலமும் ப்ரதிக்ஷணமுண்டான பரிணாமத்தை ஸ்வப$_4$ாவமாகவுடைத்தாய், தமஸ்ஸு. ப்ரக்ருதி, அந்ருதம், அவித்$_3$யை என்று இது முதலான நாமாந்தரங்களை உடைத்தாய், இன்னநாள் முதலென்றறிய ஒண்ணாதபடி அநாதி$_3$யான ஸம்ப$_3$ந்த$_4$த்தை உடைத்தாய், திலத்தில் தைலம்போலேயும், த$_3$ாருவில் அக்$_3$நிபோலேயும் பிரிக்க அரிதாம்படி வ்யாப்தையாய், சேதநனுடைய யத்நத்தால் கடக்க அரிதாம்படி இருக்கிற ப$_4$க$_3$வந்மாயையாலே திரோஹிதமான ஸ்வ-ப்ரகாஶத்தை உடையனாய், இப்படி அநாத்$_3$யஜ்ஞாநாந்த$_4$னாகையாலே அந்யத$_2$ா-ஜ்ஞாநவிபரீதஜ்ஞாநங்களை உடையனாய், அதடியாகவந்த ராக$_3$த்$_3$வேஷாதி$_3$களாலே தூ$_3$ஷிதாந்தःகரணனாய், அதுக்கீடாக விதி$_4$நிஷேத$_4$விஷயமான கர்மங்களைப்

पुण्यपापरूपानादिकर्मसन्तानकृतब्रह्मादि(*)सुरनरतिर्यक्स्थावरात्मकचतुर्विधशरीरप्रवेशविवशः तत्त-
द्देहात्माभिमानजनितावर्जनीयतापत्रयाऽभिभूतः गर्भजन्मबाल्ययौवनवार्धकमरणनरकादिसमस्तावस्थासु
निरन्तरविततविविधनिरवधिकदुःखपरिपूर्णो वर्तते । एवं परस्परकार्यकारणभूताविद्याकर्मवासना-
रुचिप्रकृतिसम्बन्धरूपसंसारचक्रमापन्नम् अनवधिकदुःखजालव्याकुलम् आत्मानमवलोक्य परम-
कारुणिको भगवान् अपरिमितसौहार्दस्वभावत्वात् अव्याजरूपां कृपां तनोति । 1

यथोक्तं भगवच्छास्त्रे - "एवं संसृतिचक्रस्थे भ्राम्यमाणे स्वकर्मभिः । जीवे दुःखाकुले विष्णोः कृपा काप्युपजायते ॥"(अहि.सं) इति । तस्यैतस्य भगवदपारकरुणामृतपरिणामरूपकटाक्षवीक्षासन्धुक्षितसत्त्वोद्रेकसमुत्पन्नस्वोज्जिजीविषाकस्य बाह्यकुदृष्टिमतवैमुख्यविशिष्टस्य निरवधिकशिष्टपरिग्रहातिशयनिगमनिष्ठप्रामाण्यविश्वासस्य कर्मभागावगतक्षयिष्णुफलविरक्तस्य ब्रह्मभागप्रतिपन्नानन्तस्थिरफलापरिमितोदारकल्याणैकतानस्वरूपरूपगुणविभवब्रह्मानुभवजनितनिरस्तातिशया-

---

பண்ணுநின்று கொண்டு தத3நுகு3ணவாஸநையாலே வாஸிதனாய், அவ்வாஸநாப3லத்தாலே வர்த்தி4தமாய்த் தடையற்றுக் கிடக்கிற விபரீதருசியை உடையனாய், அத்தாலே திரட்டப்பட்ட புண்யபாபரூபமான அநாதி3கர்மப்ரவாஹத்தாலே உண்டான தே3வதிர்யங்மநுஷ்யஸ்த2ாவராத்மகமான சதுர்வித4ஶரீரப்ரவேஶத்தாலே பரவஶனாய், அவ்வோ தே3ஹங்களிலே ஆத்மாபி4மாநத்தாலே பிறந்து அவர்ஜநீயமான தாபத்ரயங்களாலே அபி4பூ4தனாய், கர்ப்ப4ம், ஜந்மம், பா3ல்யம், யௌவநம், வார்த்3த4கம், மரணம், நரகம் என்கிற அவஸ்த2ாஸப்தகம் துடக்கமான ஸமஸ்தாவஸ்தை2களிலும் நிரந்தரமாகப் பரம்பி நாநாவித4மான முடிவில்லாத து3:க2ஸாக3ரத்திலே அழுந்தி உந்மத்தரைப்போலே தன்னை மறந்து திரியாநிற்கும். இப்படி ஒன்றுக்கொன்று கார்யகாரணபூ4தமான அவித்3யாகர்மவாஸநாருசிப்ரக்ருதிஸம்ப3ந்த4ரூபமாயிருக்கிற ஸம்ஸாரசக்ரத்திலே அகப்பட்டு அநவதி4கமான து3:க2ஜாலத்தாலே வ்யாகுலனான இந்த ஜீவாத்மாவைப் பார்த்து, பரமகாருணிகனான ஸர்வேஶ்வரன் அபரிமிதமான ஸௌஹார்த்த3த்தை ஸ்வரூபமாக உடையனாகையாலே நிர்ஹேதுகக்ருபையைப் பண்ணாநிற்கும்.

“ஏவம் ஸம்ஸ்ருதிசக்ரஸ்தே2 ப்4ராம்யமாணே ஸ்வகர்மபி4:। ஜீவே து3:க2ாகுலே விஷ்ணோ: க்ருபா காப்யுபஜாயதே” - இப்படி ஸம்ஸாரசக்ரஸ்த2னாய், ஸ்வகர்மங்களாலே ப்4ராம்யமாணனாய், து3:க2ாகுலனான சேதநனைக்குறித்து, ஸர்வவ்யாபகனான ஸர்வேஶ்வரனுக்கு ஒரு க்ருபை பிறக்குமென்று ப4க3வச்ச2ாஸ்த்ரத்திலே சொல்லிற்றிறே. இந்த நிர்ஹேதுகக்ருபையினுடைய பரிணாமரூபமான ப4க3வத்கடாக்ஷத்தாலுண்டான விஷயீகாரத்தினாலே ஸத்த்வோத்3ரேகம் பிறந்து, அத்தாலே தன்னுடைய உஜ்ஜீவநத்திலே ஒருப்பட்டு, ரஜஸ்தம:கார்யமான பா3ஹ்யகுத்3ருஷ்டிமதங்களில் விமுக2னாய், நிரவதி4கமான ஶிஷ்டபரிக்3ரஹத்தை உடைத்தான அபௌருஷேயமான வேத3த்திலே நிலைநின்ற ப்ராமாண்யவிஶ்வாஸத்தை உடையனாய், கர்மப4ாக3த்திலே அறியப்பட்ட க்ஷயிஷ்ணுப2லங்களில் விரக்தனாய், ப்3ரஹ்மப4ாகத்திலே ப்ரதிபந்நமாய், அநந்தஸ்தி2ரப2லமாய், அபரிமிதோதா3ரகல்யாணைகதாநமான ஸ்வரூபரூபகு3ணவிப4வங்களை உடைய ப்3ரஹ்மாநுப4வத்தாலே ஜநிதமாய் நிரஸ்தாதிஶயாஹ்லாத3ஸுக2ப4ாவைகலக்ஷணமான பரமபுருஷார்த்த2த்திலே

ह्लादसुखभावैकलक्षण(*वि.पु.6 5-59*)परमपुरुषार्थप्रवृद्धाभिलाषस्य तत्प्राप्त्युपायजिज्ञासया सत्सन्तान-प्रसूतसदाचारयुक्तपरमश्रोत्रियब्रह्मनिष्ठवेदविदग्रेसरसदाचार्यचरणयुगलं विधिवदुपसन्नस्य कस्य-चिच्चेतनस्य तदुपदेष्टव्यतत्त्वहितयाथात्म्यप्रकाशकत्वात् रहस्यत्रयं ज्ञातव्यम् । 2

तत्र - तत्त्वरूपस्वरूपयाथात्म्यप्रकाशको मूलमन्त्रः हितरूपस्वरूपानुष्ठानप्रकाशकं द्वयं अस्मिन्न-नुष्ठाने शरण्याभिमतिप्रकाशकश्चरमश्लोकः । 3

अस्यापि हितविषयत्वात् तत्त्वहितपरं रहस्यत्रयमित्युक्तम् । ननु स्वरूपानुष्ठानस्य स्वतश्शरण्याभिमतत्वात् तदर्थं श्लोकस्य पृथगुपादानं निष्प्रयोजनमिति - मैवम् :- 4

हितरूपानुष्ठानं भक्तिः प्रपत्तिश्चेति द्विविधम् ; तत्र भक्तौ "तेषां सततयुक्तानां भजतां प्रीतिपूर्वकम् । ददामि बुद्धियोगं तं येन मामुपयान्ति ते ।। तेषामेवानुकम्पार्थमहमज्ञानजं तमः । नाशयाम्यात्म-

---

ப்ரவ்ருத்$_3$த$_4$மான அபி$_4$லாஷத்தை உடையனாய், அந்த புருஷார்த்த$_2$ப்ராப்த்யுபா-யத்தை அறிய வேண்டும் இச்சை$_2$யாலே ஸத்ஸந்தாநப்ரஸூதனாய், ஸத$_3$ாசாரயுக்த-னாய், பரமஶ்ரோத்ரியனாய், ப்$_3$ரஹ்மநிஷ்ட$_2$னாய், வேத$_3$வித$_3$க்$_3$ரேஸரனான ஸத$_3$ாசார்ய-னுடைய சரணங்களை ஶாஸ்த்ரோக்தமான படியிலே ப$_4$க்திஶ்ரத்$_3$தை$_4$களோடே ஆஶ்ரயித்தானொரு சேதநனுக்கு, அவ்வாசார்யனாலே உபதே$_3$ஶிக்கப்படுமதான தத்வ-ஹிதங்களினுடைய யாத$_2$ாத்ம்யத்தை ப்ரகாஶிப்பிக்கையாலே ரஹஸ்யத்ரயமும் ஜ்ஞாதவ்யம். 2

(தத்ரேதி) தத்வரூபமான ஸ்வரூபயாத$_2$ாம்யத்தைத் திருமந்த்ரம் ப்ரகாஶிப்பிக்கிறது; ஹிதரூபமான ஸ்வரூபாநுரூபாநுஷ்ட$_2$ாநத்தை த்$_3$வயம்ப்ரகாஶிப்பிக்கிறது; ஹிதா-நுஷ்ட$_2$ாநம் ஶரண்யனுக்கு அபி$_4$மதமென்னுமிடத்தை சரமஶ்லோகம் ப்ரகாஶிப்பிக்-கிறது. 3

(அஸ்யேதி) இதுவும் ஹிதபரமாகையாலே தத்வஹிதபரம் ரஹஸ்யத்ரயமென்று சொல்லப்பட்டது. ஸ்வரூபாநுரூபமான அநுஷ்ட$_2$ாநம் ஸ்வத ஏவ ஶரண்யனுக்கு அபி$_4$மதமாகையாலே அதற்காக ஶ்லோகத்தைத் தனித்தெடுக்கிறதுக்கு ப்ரயோஜந-மில்லையே என்னில்; 4

அப்படியன்று :- ஹிதரூபமான அநுஷ்ட$_2$ாநம் ப$_4$க்திரூபமாயும், ப்ரபத்திரூபமாயும் இரண்டுபடிப்பட்டிருக்கும். அதில் - ப$_4$கதியில், "தேஷாம் ஸததயுக்தாநாம் ப$_4$ஜதாம் ப்ரீதிபூர்வகம் । த$_3$த$_3$ாமி பு$_3$த்$_3$தி$_4$யோக$_3$ம தம் யேநமாமுபயாந்தி தே ।। தேஷாமேவா-நுகம்பார்த்த$_2$மஹமஜ்ஞாநஜம் தம: । நாஶயாம்யாத்மப$_4$ாவஸ்தே$_2$ா ஜ்ஞாநதீ$_3$பேந ப$_4$ாஸ்வதா।।" என்று - என்றுமொக்க பராப்தியை ஆசைப்பட்டு ப்ரீதிபூர்வகமாக ப$_4$ஜித்துப் போருமவர்களுக்கு, என்னை யாதொரு பு$_3$த்$_3$தி$_4$யோக$_3$த்தாலே பெறுவார்-கள், அந்த வ்யவஸாயயோக$_3$த்தைப்பண்ணிக்கொண்டுநிற்பேனென்றும், அவர்க-ளுக்கே இந்த பு$_3$த்$_3$தி$_4$ உதி$_3$க்கைக்குறுப்பான க்ருபை பண்ணுவேன், அதுக்கு

भावस्थो ज्ञानदीपेन भास्वता "(गी. 10-10,11) इति व्यवसायात्मकबुद्ध्युत्पादनतद्विरोधिसन्तमस-
निबर्हणद्वारेण साहाय्यकमात्रं भगवतैवोक्तम् ; प्रपत्तौ तु "सर्वपापेभ्यो मोक्षयिष्यामि"(गी. 18 66)
इति प्राप्तिविरोधिसर्वपापविमोचनस्य स्वयं कर्तृत्ववचनात् अस्य शरण्याभिमततमत्वं सुस्पष्टम्;
अतः पृथगुपादानं सप्रयोजनम् । तस्मात् तत्त्वहितार्थपरतया रहस्यत्रयं ज्ञातव्यमिति सिद्धम् । 5

सप्रकारस्वरूपोक्तिसामर्थ्यान्मूलमन्त्रतः । तत्त्वस्वरूपयाथात्म्यं वर्ण्यते तत्त्वदर्शिभिः ॥
तत्र - स्वरूपयाथात्म्यपरो मूलमन्त्रः "अनन्ता वै भगवन्मन्त्राः" इति वेदान्तोदितसकलभगवन्म-
न्त्रोत्कृष्टतया "नारायणाय विद्महे वासुदेवाय धीमहि । तन्नो विष्णुः प्रचोदयात् "(विष्णुगायत्री) इति
विष्णुगायत्र्या प्रतिपादिते व्यापकभगवन्मन्त्रत्रये प्रथमोपात्तत्वात् अर्थसम्पत्तेश्च सर्वमन्त्रान्तरोत्कृष्टतम
इत्यवगम्यते । 6

तत्र गायत्र्यां मन्त्रत्रयप्रधानभूतनामत्रयोपादानं तेषां कृत्स्नोपादानप्रदर्शनार्थम् । व्याप्यव्यापक-

---

விரோதி$_4$யான அஜ்ஞாநகார்யமாயிருக்கிற ஆந்தரமான தமஸ்ஸை இவர்கள்
நெஞ்சுக்குள்ளே நின்று ஒளிவிடுகிற ஜ்ஞாநதீ$_3$பத்தாலே நஶிப்பியாநிற்ப-
னென்றும், ப$_4$ஜநத்துக்கு ஸஹகாரியாமளவும் ப$_4$க$_3$வான்தன்னாலே அருளிச்-
